# சிலாங்கூர் இன்று

இலவசம்

SELANGOR

www.selangorkini.my | Media_Selangor | SelangorTV selangortv.my | MediaSelangor | SMART SELANGOR

திருவள்ளுவர் ஆண்டு 2054 / சோபகிருது வருடம் வைகாசி மாதம் / ஜூன் 06/2023 / June 06/2023


# இந்திய சமூகத்திற்கான திறன் பயிற்சித் திட்டம்

## சித்தம் - மித்ரா ஒத்துழைப்பு - ரோட்சியா, டத்தோ ரமணன் பேச்சு

**புத்ரா ஜெயா,** குறைந்த வருமானம் பெறும் இந்திய சமூகத்தின் பி40 தரப்பினருக்கு வர்த்தக மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்கும் திட்டங்களை மேலும் விரிவான அளவில் மேற்கொள்வதற்காக மித்ரா எனப்படும் மலேசிய இந்திய சமூக உருமாற்றுப் பிரிவுடன் ஒத்துழைக்க சிலாங்கூர் மாநில அரசு ஆர்வம் கொண்டுள்ளது. இந்நோக்கத்தின் அடிப்படையில் தொழில் முனைவோர் மேம்பாட்டு துறைக்கான மாநில ஆட்சிக்குழு உறுப்பினரும் சித்தம் வாரியத் தலைவருமான ரோட்சியா இஸ்மாயில் மித்ரா சிறப்பு பணிக்குழுவின் தலைவர் டத்தோ ரமணன் இராமகிருஷ்ணனுடன் கடந்த வெள்ளிக்கிழமை சந்திப்பு நடத்தினார்.

சித்தம் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டு வரும் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி, திறன் மற்றும் தயாரிப்பு பயிற்சி, குரோ எனப்படும் வர்த்தக வழிகாட்டிப் பயிற்சி, கிரான் எனப்படும் வர்த்தக உபகரண உதவி ஆகிய நான்கு திட்டங்களையும் மேலும் விரிவான அளவில் மேற்கொள்வது தொடர்பில் ரோட்சியா மற்றும் டத்தோ ரமணன் விவாதித்ததாக சித்தம் நிர்வாகி எஸ்.கென்னத் சேம் கூறினார்.

குறிப்பாக குறைந்த வருமானம் பெறும் பி40 பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு சமையல், முக ஒப்பனை, மணப்பெண் அலங்காரம் போன்ற தொழில்களில் பயிற்சிகளை வழங்கி அவர்கள் உபரி வருமானம் பெறுவதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்கில் ஒவ்வொரு தொகுதியிலும் இரு பயிற்சித் திட்டங்களை சித்தம் தற்போது மேற்கொண்டு வருகிறது.

மேலும் அதிகமானோர் பயன் பெறுவதற்கு ஏதுவாக இத்திட்டங்களின் எண்ணிக்கையை நான்காக அதிகரிப்பதில் மித்ராவின் உதவியை நாங்கள் நாடியுள்ளோம் என் அவர் குறிப்பிட்டார். இந்திய சமூகத்தை இலக்காக கொண்டு மாநில அரசு அமல்படுத்தி வரும் சித்தம் திட்டங்கள் குறித்த விளக்கத்தை மிகவும் ஆர்வத்துடன் கேட்டறிந்த டத்தோ ரமணன், இத்திட்ட அமலாக்கத்தில் சித்தம் அமைப்புடன் ஒத்துழைக்க கொள்கையளவில் ஒப்புக் கொண்டதாகவும் அவர் சொன்னார்.

பின்னர் நடைபெறவிருக்கும் அடுத்தக் கட்ட சந்திப்புகளுக்குப் பின்னர் இந்த ஒத்துழைப்பு தொடர்பான அம்சங்கள் இறுதி செய்யப்படும். இந்திய சமூகத்தின் மேம்பாட்டை உறுதி செய்வதில் முழு கடப்பாட்டை வெளிப்படுத்திய டத்தோ ரமணன் மற்றும் பல்வேறு பணிகளுக்கு மத்தியில் இந்திய சமூக நலன் கருதி இச்சந்திப்பை நடத்திய ரோட்சியா ஆகியோருக்கு தாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்வதாக கென்னத் தெரிவித்தார்.



## செந்தோசா சட்டமன்ற தொகுதியில் சேவையாளர்களுக்கு விருந்தும் பாராட்டும்

முழு செய்திகளுக்கு பக்கம் 16...






# தமிழ்ப்பள்ளிகள் ஆலயங்களுக்கு ஈடானது - தன்முனைப்பு உரை

**கோல சிலாங்கூர்,** தமிழ்ப்பள்ளிக்கு பெற்றோர்களின் பங்களிப்பு அவசியம், பள்ளிக்கூடம் என்பது ஓர் கோவில். நாம் கோவிலுக்கு சென்றால் அங்கு நாம் எப்படி நற் சிந்தனை வலுப்பெற பய பக்தியுடன் இறைவனிடம் வேண்டுகிறோம். அது போல் பள்ளியில் ஒவ்வொரு மாணவரும் உள்ள தூய்மையுடன் இருக்க வேண்டும்.

பள்ளிக்கூடத்திற்கு பிள்ளைகளை அனுப்பினால் மட்டும் போதாது, பிள்ளைகளின் மேம்பாட்டில் பெற்றோர்களின் பங்கு பெரியது, அதனுடன் ஆசிரியர்கள் ஒத்துழைப்பு மிக அவசியம். அப்பொழுதுதான் சிறந்த மாணவர்களை உருவாக்க முடியும். நம் பிள்ளைகளின் பள்ளி நடவடிக்கைகள் குறித்து அறிய பெற்றோர் ஆசிரியர் நல்லுறவு அவசியம் என்றார்.

நம் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்கு ஒவ்வொரு நாளும் ஆசிரியர்கள் வழங்கும் பாடங்களை அறிந்து பெற்றோர்களும் ஆசிரியர்களுக்கு தங்களின் ஒத்துழைப்பை வழங்கினால் ஒவ்வொரு மாணவனும் கல்வியில் சிறந்து விளங்குவார் என்பதனை நான் இங்கு உறுதியாக கூறுகிறேன் என்று மஸ்துரா அனைத்துலக கல்லூரியின் கல்வி ஆலோசகரும், சொற்பொழிவாளருமான முனைவர் குமரன் வேலு ராமசாமி கோல சிலாங்கூர் வாகீசர் தமிழ் பள்ளியில் பெற்றோர்களுடன் நடத்தப்பட்ட தன்முனைப்பு உரையாடல் ஒன்றில் கூறினார்.

இன்றைய காலகட்டத்தில் நம் இந்திய பிள்ளைகளை தமிழ் பள்ளிக்கு அனுப்புவது, தமிழுக்கு நாம் கொடுக்கும் மரியாதை மட்டுமின்றி தாய் மொழி, மற்றும் கலாச்சாரத்தின் மீது நமக்குள்ள ஆத்ம தொடர்பு. ஒவ்வொரு பள்ளிக்கூடமும் ஒரு கோவில். கோவிலில் மதுபானம் அருந்த மாட்டோம், காலணியும் அணிய மாட்டோம், தகாத வார்த்தைகள் பேச மாட்டோம், அங்கே நல்லவை கிட்ட வேண்டுகிறோம், பள்ளிகளில் இறைவனிடத்தில் வேண்டியவை கைகூட உழைக்கிறோம், நம் பிள்ளைகளை தயார் படுத்துகிறோம்.

கோவிலில் பேணும் நல் ஒழுக்கத்தை பள்ளிகளிலும் கடைப்பிடிக்க வேண்டும் என்றார். அதேபோல் நமது பள்ளிகளின் பங்களிப்பை ஒவ்வொரு பெற்றோரும் உணர்ந்து , நம் பிள்ளைகளின் மேம்பாட்டில் நாம் கவனம் செலுத்தினால் பள்ளியின் வளர்ச்சி, நற்பெயர் உயர்வதுடன் நம் பிள்ளைகளின் வளர்ச்சியும் செம்மைப்படும்.முக்கியமாக பிள்ளைகளை தவறாமல் பள்ளிக்கு அனுப்ப வேண்டும். அவர்கள் எங்கும், எப்பொழுதும் மரியாதையுடன் நடக்க சொல்லித் தர வேண்டும்.

ஆரம்பப் பள்ளிப் பிள்ளைகளுக்கு கைத்தொலைபேசியை வாங்கி கொடுக்காமல் இருக்க வேண்டும். இந்த கை பேசிகள், தொல்லை பேசிகள் ஆகி வருகின்றன என்று கூறி தனது உரையை முடித்தார் முனைவர் குமரன் வேலு ராமசாமி.

அவரின் உரையை தொடர்ந்து பள்ளியின் துணைத்தலைவர் திருமதி விக்டோரியா சூசை "ஒரு கை தட்டினால் ஓசை வராது " பெற்றோர்கள் பள்ளிகளுடன் நல்ல உறவைக் கொண்டிருக்க வேண்டும். நம் பிள்ளைகளின் வாழ்வு மலர பெற்றோர்களை , ஆசிரியர்களுடன் ஒன்றிணைந்து செயல்பட அழைத்தார். நம் செல்வங்கள் நாட்டின் பொக்கிசமாக ஜொலிப்பதற்கான ஒத்துழைப்பை தலைமை ஆசிரியருக்கு வழங்க தனது முடிவுரையில் அவர் கேட்டுக்கொண்டார் .



## ஸ்ரீமூடா ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம் இரு தமிழ்ப்பள்ளிகளுக்கு நிதியுதவி

**ஷா ஆலம்,** இந்நாட்டில் சமயத்திற்கு மட்டுமின்றி இந்திய சமூகத்தின் கல்வி மற்றும் கலாசார மேம்பாட்டிற்கும் அளப்பரிய பங்கினை ஆற்றி வரும் ஆலயங்களில் ஒன்றாக இங்குள்ள தாமான் ஸ்ரீமூடா, ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம் விளங்கி வருகிறது.

குறிப்பாக தமிழ்ப்பள்ளிகளின் மேம்பாட்டிற்கு உதவும் நோக்கில் அர்ச்சனை சீட்டுகள் வழி கிடைக்கும் வருமானத்தில் பத்து விழுக்காட்டுத் தொகையை ஷா ஆலம் வட்டாரத்திலுள்ள இரு பள்ளிகளுக்கு இவ்வாலயம் கடந்த எட்டு ஆண்டுகளாக வழங்கி வருகிறது.

இதன் அடிப்படையில் இவ்வாண்டிற்கான நிதி ஒதுக்கீடாக ஷா ஆலம் சுங்கை ரெங்கம் தமிழ்ப்பள்ளியின் மண்டப நிர்மாணிப்புக்கு 10,000 வெள்ளியும் கெமுனிங் உத்தாமா எமரால்ட் தமிழ்ப்பள்ளிக்கு பாட புத்தகங்களை வாங்க 3,000 வெள்ளியும் ஆலயம் சார்பாக வழங்கப்பட்டதாக ஆலயத்தின் துணைத் தலைவர் எம். சுகுமாறன் கூறினார்.

சம்பந்தப்பட்ட பள்ளி நிர்வாகங்கள் விடுக்கும் கோரிக்கையின் அடிப்படையில் அவர்களுக்கு தேவையான பொருள்களை நாங்கள் வழங்குகிறோம். ஏமரால்ட் பள்ளியின் வேண்டு கோளுக்கிணங்க அப்பள்ளிக்கு பாடபுத்தகங்களை வழங்கினோம்.

தமிழ்ப்பள்ளிகள் மீதான அக்கறையை வெறும் வார்த்தைகளில் மட்டும் வெளிப்படுத்தாமல் செயலிலும் காட்டும் நோக்கில் ஒவ்வொரு அர்ச்சனை சீட்டிலும் "நமது பிள்ளைகளைத் தமிழ்ப் பள்ளிக்கு அனுப்புவோம்" என்ற வாசகத்தையும் தாங்கள் இடம் பெறச் செய்துள்ளதாக அவர் சொன்னார்.

நாட்டிலுள்ள இதர ஆலயங்களும் தங்கள் வட்டாரத்திலுள்ள தமிழ்ப்பள்ளிகளைத் தத்தெடுத்து இதுபோன்ற உதவித்திட்டங்களைஅமல்படுத்தினால் அப்பள்ளிகள் மேம்பாடு காண்பதற்கும் இந்நாட்டில் தமிழ் மொழி தொடர்ந்து தழைத்-திருப்பதற்கும் வாய்ப்பு ஏற்படும் என்றார் அவர்.



## கிள்ளான் மாவட்டக் காவல் துறையினர் - பள்ளி உபகரணங்கள் அன்பளிப்பு

**கிள்ளான்,** குற்றச் செயல்களைத் தடுப்பது மற்றும் பொது மக்களுக்கு பாதுகாப்பு அளிப்பது போன்ற தங்களின் வழக்கமான பணிகளைத் தாண்டி மக்களுக்கு உதவிகளை வழங்கும் தன்னார்வலர்களாகவும் அரச மலேசிய காவல் துறையினர் செயல்பட்டு வருகின்றனர்.

பொருளாதாரச் சுமையையும் நேர விரயத்தையும் பொருட்படுத்தாமல் சமூகத்தின் உயர்வில் தங்களின் பங்களிப்பும் இருக்க வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில் அவர்கள் மேற்கொண்டு வரும் இப்பணி பெரிதும் போற்றுதலுக்குரியது.

அந்த வகையில் அண்மையில் அனுசரிக்கப்பட்ட 216வது போலீஸ் தினத்தை முன்னிட்டு தென் கிள்ளான் மாவட்ட காவல் துறையின் இந்திய அதிகாரிகள் மற்றும் உறுப்பினர்கள் இம்மாவட்டத்திலுள்ள ஐந்து தமிழ்ப் பள்ளிகளில் பயிலும் 100 மாணவர்களுக்கு புத்தகப் பை மற்றும் பள்ளி உபகரணப் பொருள்ளை அன்பளிப்பாக வழங்கினர்.

தாமான் செந்தோசா தமிழ்ப்பள்ளி, ஹைலண்ட்ஸ் தோட்ட தமிழ்ப்பள்ளி, பத்து அம்பாட் தமிழ்ப்பள்ளி, வாட்சன் தமிழ்ப்பள்ளி மற்றும் தெப்பி சுங்கை தமிழ்ப்பள்ளி ஆகியவை இத்திட்டத்தின் கீழ் உதவிப் பொருள்களைப் பெற்றன.

தாமான் செந்தோசா தமிழ்ப்பள்ளியைச் சேர்ந்த 20 மாணவர்கள் சுமார் 100 வெள்ளி மதிப்புள்ள பள்ளி உபகரணங்களை காவல் துறையினரிடமிருந்து பெற்றுக் கொண்டதாகப் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் தங்கராஜா தெரிவித்தார்.

இந்த உதவித் திட்டத்தில் தங்கள் பள்ளி மாணவர்களுக்கும் வாய்ப்பு வழங்கிய தென் கிள்ளான் மாவட்ட காவல் துறையின் இந்திய அதிகாரிகளுக்குப் பள்ளியின் சார்பாகத் தாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்வதாக அவர் மேலும் சொன்னார்.

# நதி பாதுகாப்பு மீது சமூக விழிப்புணர்வை அதிகரிக்க முயற்சி

**ஷா ஆலம்,** நதியைப் பாதுகாப்பதில் சமூக விழிப்புணர்வை அதிகரிக்க லாண்டாசன் லுமாயன் எஸ்டிஎன் பிஎச்டி (எல்எல்எஸ்பி) பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

சமூகத்துடன், குறிப்பாக உள்ளூர் மக்கள் மற்றும் நதியின் முகத்துவாரத்தில் உள்ள மீனவர்களுடன் நெருக்கமாக இருப்பதையே அந்நிறுவனம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது என்று அதன் நிர்வாக இயக்குனர் தெரிவித்தார்.



"நாங்கள் இந்த கிராம மக்களுடன் தொடர்பில் இருக்கிறோம். பின்னர் நாங்கள் ஒன்றாகச் சேர்ந்து ஜெட்டியைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சுத்தம் செய்தோம். இப்போது மீனவச் சங்கம் உருவாக்கிய நதியை ஆய்வு செய்யும் சுற்றுலாத் திட்டத்தை தொடங்கியுள்ளோம்.

"பள்ளிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் கார்ப்பரேட் சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களைக் கிள்ளான் நதியின் நிலையைப் பார்க்க வருமாறு நாங்கள் அழைக்கிறோம்," என்று சைஃபுல் அஸ்மென் நோர்டின் சமீபத்தில் சிலாங்கூர் மீடியாவிடம் பேட்டி அளித்தார்.

மேலும், எல்.எல்.எஸ்.பி , தீ ஓஷன் கிளீனிங் உடன் இணைந்து நதிக்கழிவு-களைக், குறிப்பாகப் பிளாஸ்டிக்கை அகற்றி அவற்றை மீண்டும் பயன்படுத்துவதற்கான வழிகளைத் தேடுகிறது என்றார் சைஃபுல் அஸ்மென்.

நெஸ்லே மலேசியாவுடன் சேர்ந்து எல்.எல்.எஸ்.பி குப்பை பொறிகளில் இருந்து பிளாஸ்டிக்களை அகற்றி அதனை சுத்தம் செய்வதற்கான திட்டத்தையும் செயல்-படுத்தியது.

2018 ஆம் ஆண்டில், மாசுபட்ட கிள்ளான் நதியைச் சுத்தப்படுத்தவும், பாதுகாக்கவும் மற்றும் மேம்படுத்தவும் சிலாங்கூர் கடல்சார் நுழைவாயில் (SMG) திட்டத்தை மாநில அரசு தொடங்கியது குறிப்பிடத்தக்கது.

# வெள்ளப் பிரச்சனையைச் சமாளிக்க
## வடிகால் அமைப்பு மேம்பாடு

**ஷா ஆலம்,** இங்குள்ள தாமான் மெலாவிஸில் ஏற்படும் வெள்ளப் பிரச்சனையைச் சமாளிக்கக் கிள்ளான் நகராட்சி, பெரிய U- வடிவக் கான்கிரீட் வடிகால் நிறுவுவது உட்பட, வடிகால் அமைப்பை மேம்படுத்துவதற்கான பணிகளை தீவிரமாக மேற்கொண்டு வருகிறது.



மேலும், சிலாங்கூர் நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் துறையும் (JPS) வெள்ளத்தை தணிக்கும் இப்பணியில் ஈடுபட்டுள்ளது எனக் கிள்ளான் நகராட்சி கார்ப்பரேட் கம்யூனிகேஷன்ஸ் இயக்குனர் நார்பிசா மஹ்ஃபிஸ் கூறினார்.

"மேம்பாட்டு பணிகள் தற்போது 70 சதவீதத்தை எட்டியுள்ள நிலையில் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது இந்த திட்டம் வெள்ளம் தணிப்பு திட்டத்தின் ஒரு பகுதியாகும். அதன்படி இரண்டு முதல் மூன்று மணி நேரம் வரை கனமழை பெய்யும் போது நீர் ஓட்டம் தடையின்றி இருக்கும் என்றார்.

"நாங்கள் ஜாலான் பெசியின் ஒரு பகுதியில் U வடிவக் கான்கிரீட் கால்வாய் நிறுவும் பணியில் ஈடுபட்டுள்ளோம். ஜாலான் மாத்தாஹரியில் ஒரு நீர்ப்பிடிப்பு குளத்தையும் எம்.பி.கே கட்டியுள்ளது. இது சுற்றியுள்ள பகுதியில் வெள்ளப் பெருக்கைக் குறைக்கிறது," என்று அவரைத் தொடர்பு கொண்டபோது கூறினார்.

லிண்தாங் பெசியில் உள்ள வீடுகளுக்குள் மண் அரிப்பு அல்லது நீர் கசிவதைத் தடுக்க அவ்விடத்தைச் சுற்றி 24.46 மீட்டர் நீளமுள்ள கான்கிரீட் தடுப்பணை கட்டும் பணி நிறைவடைந்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

# மூல நீர் ஆதார உத்தரவாதத் திட்டம்
## - 70 லட்சம் பேர் பயன்பெறக்கூடும்

**கோல சிலாங்கூர்,** நீர் விநியோகத் தடை பிரச்சனைக்குத் தீர்வு காணும் நோக்கில் தொடங்கப்பட்டுள்ள மூல நீர் ஆதார உத்தரவாதத் திட்டம் அடுத்தாண்டு தொடக்கத்தில் செயல்படும்.




நீர் இறைப்பு பம்ப் இயந்திரங்கள் அமைப்பது, நீர் சேகரிப்பு குளங்களை உருவாக்குவது, நீர் இறைப்பு மற்றும் ஆறுகளை 51 விழுக்காடு அளவுக்கு தடம் மாற்றுவது ஆகிய நான்கு திட்ட தொகுப்புகளை இந்த நீர் ஆதார உத்தரவாதத் திட்டம் உள்ளடக்கியுள்ளதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். கடந்த 2020ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த திட்டம் இவ்வாண்டு அக்டோபர் மாத வாக்கில் முற்று பெறும் என எதிர் பார்க்கப் படுகிறது. இதன் செயல்பாடுகளை பரீசார்த்த முறையில் சோதிப்பது உள்பட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அதன் பணிகள் அடுத்தாண்டு தொடக்கத்தில் முழு அளவில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது என அவர் குறிப்பிட்டார்.

16 லட்சம் வாடிக்கையாளர் கணக்கை உட்படுத்திய சுமார் 70 லட்சம் பேருக்கு நீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளதால் இந்த திட்டம் அதிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக விளங்குகிறது. அது மட்டுமின்றி கிள்ளான் பள்ளத்தாக்கு, புத்ராஜெயா மற்றும் தொழில் துறையினரையும் இந்த நீர் விநியோகத் திட்டம் உள்ளடக்கியுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

அன்றாட வாழ்க்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் அளவுக்கு நீர் விநியோகத் தடை பிரச்சனைகளை மாநிலம் பல முறை எதிர்நோக்கியதன் விளைவாக மாநில அரசின் முழு செலவில் இந்த திட்டம் அமல்படுத்தப்பட்டது என்று அவர் மேலும் சொன்னார்.





# இன்டர்செப்டர் 005
## மூலம் கிள்ளான் நதியை சுத்தம் செய்ய முயற்சி

**ஷா ஆலம்,** நதியை சுத்தம் செய்யும் இன்டர்செப்டர் 005 இயந்திரம் மூலம் கிள்ளான் நதியை சுத்தம் செய்து மீட்கும் முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டு வருவதாக உள்கட்டமைப்பு மற்றும் பொது வசதிகள் எஸ்கோ தெரிவித்துள்ளது.

ஆகஸ்ட் 2019 இல் சுங்கை கிள்ளானில் இன்டர்செப்டர் 002 இயக்கப்பட்ட பிறகு, இரண்டாவது இன்டர்செப்டர் நாட்டில் செயல்பட்டு வருவதாக இஷாம் ஹாஷிம் கூறினார். "சிலாங்கூர் கடல்வழி நுழைவாய் திட்டத்தின் கீழ் இன்டர்செப்டர் 005 ஐப் பெற்ற முதல் நாடு மலேசியா.

"இன்டர் செப்டர் 002 மற்றும் 005 இருப்பதால், மாசு மட்டத்தில் ஐந்தாவது நிலையில் இருந்த சுங்கை கிள்ளான் அதன் அளவு குறைந்து தற்போது மூன்றாம் நிலையில் உள்ளது" என்று அவர் முகநூல் மூலம் தெரிவித்தார்.



# சிலாங்கூரில் உள்ள
## அணைகள் நீர் கொள்ளளவை எட்டியது

**ஷா ஆலம்,** நேற்றைய நிலவரப்படி சிலாங்கூரில் உள்ள ஏழு நீர்த்தேக்கங்களும் 100 சதவீத நீர் கொள்ளளவை கொண்டுள்ளன. இதன்வழி மழையின்றி நான்கு மாதங்கள் வரை சமாளிக்க முடியும்.

சிலாங்கூர் நீர் மேலாண்மை வாரியம் (லுவாஸ்), 98 நீர் நிலைகளை மாற்று நீர் ஆதாரங்களாக அடையாளம் கண்டுள்ளது என டத்தோ மந்திரி புசார் தெரிவித்தார்.

மே 17ம் தேதி நிலவரப்படி, ஏழு அணைகளின் முழு நீர்த்தேக்கமும் 100 சதவீதம் முழு கொள்ளளவை எட்டியுள்ளது.

"மொத்த மாநிலத்தின் நீர் பயன்பாட்டின் போக்கின் அடிப்படையில், மூல நீர் கொள்ளளவு நான்கு மாதங்களுக்கு மழையின்றி நீடிக்கும்" என்று டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி நேற்று ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார். எல் நினோவின் நிகழ்வு ஜூன் முதல் செப்டம்பர் வரை 57 சதவிகிதம் ஏற்பட்டு செப்டம்பர் முதல் நவம்பர் வரை 62 சதவிகிதம் அதிகரிக்கும் என்று மலேசிய வானிலை ஆய்வுத் துறை எதிர்பார்க்கிறது.



# தொழிற்சங்கங்களுக்கு மனிதவள அமைச்சு 26 லட்சம் வெள்ளி மானியம்

**ஈப்போ,** தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்திற்கு 19 ஆயிரம் வெள்ளி மானியத்தை மனிதவள அமைச்சர் வி. சிவகுமார் வழங்கி பேருதவி புரிந்துள்ளார்.

கடந்த வாரம் ஈப்போ இம்பியானா ஹோட்டலில் நடைபெற்ற இந்த நிதி வழங்கும் நிகழ்வில் மனிதவள அமைச்சர் வி.சிவக்குமார் சார்பில் மலேசிய தொழிற்சங்க பதிவு இலாகாவின் தலைமை இயக்குனர் கமால் பின் பாட்லி தலைமைத் தாங்கினார்.

இந்த நிகழ்வில் 189 தொழிற்சங்கங்களுக்கு மொத்தம் 26 லட்சம் வெள்ளி மானியம் வழங்கப்பட்டது. இதில் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் 19,000 வெள்ளிப் பெற்றது.

தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் சார்பாக சிலாங்கூர் மாநில செயலாளர் வை.தாமாசேகரன், பேராக் மாநில தலைவர் ரசாக் மற்றும் மாநில செயலாளர் மு. குணாசன் ஆகியோர் மானியத்தை பெற்றுக் கொண்டனர்.


தொழிற்சங்கங்களை சேர்ந்த கமிட்டி உறுப்பினர்களுக்கு பயிற்சி முகாம்கள் நடத்துவதற்கு ஏதுவாக தொழிற்சங்கங்களுக்கு இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

இதனிடையே 19,000 வெள்ளியை வழங்கிய மனிதவள அமைச்சர் சிவகுமாருக்கு தேசிய தோட்டத் தொழிற்சங்கம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டது.

# பேங் சிம்பானன் நேஷனல் சிலாங்கூர் மாநில வளர்ச்சிக் கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம்

**ஷா ஆலம்,** வீட்டு வசதிகளுக்காக பல்வேறு கடன் வழங்கும் நிதி நிறுவனமான பேங் சிம்பானன் நேஷனல் (பிஎஸ்என்) வங்கி உடன் சிலாங்கூர் மாநில வளர்ச்சிக் கழகம் (பிகேஎன்எஸ்) இன்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (எம்ஓயு) கையெழுத்திட்டது.

தலைமையகத்தில் நடைபெற்ற விழாவில் பிஎஸ்என் சார்பில் அதன் தலைமை செயல் அதிகாரி ஜே கெய்ரில் மற்றும் பிகேஎன்எஸ் தலைமைச் செயல் அதிகாரி டத்தோ மஹ்மூட் அப்பாஸும் கலந்து கொண்டனர்.




இந்த ஒத்துழைப்பு மூலம் வீடு வாங்குபவர்களுக்கு அவர்களின் தேவைகள் மற்றும் தகுதிகளுக்கு ஏற்ப பல்வேறு கட்டணப் பேக்கேஜ்கள் வழங்கப்படுகின்றன என்று மஹ்மூட் கூறினார்.

"இந்த மூலோபாய கூட்டாண்மை வாடிக்கையாளர்களுக்குக் கூடுதல் தேர்வுகள் வழங்கும். இது அதிகமான மக்களுக்குக் குறிப்பாக இளைஞர்கள் மற்றும் முதல் வீடு வாங்குபவர்களுக்கு வீட்டு உரிமையின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான திட்டமாகும்.

"இந்த ஒத்துழைப்பால் வீடமைப்பு துறையில் முன்னேற்றத்தை அடைய முடியும், குறிப்பாகச் சிலாங்கூரில் முடிவடைந்த மற்றும் மேற்கொள்ளப்பட்டு இருக்கும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு, வழங்கப்படும் கடன் பேக்கேஜ்கள் மூலம் இந்த மேம்பாடுகளை அடையலாம்," என்று அவர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிறகு செய்தியாளர் கூட்டத்தில் கூறினார். இதற்கிடையில், வீடு வாங்குபவர்கள் RM50,000 வரையிலான வீட்டு மரச்சா-மான்கள் மற்றும் மின்சார தளவடங்கள் வாங்கவும், தக்காஃபுல் பாதுகாப்பு காப்புறுதி கட்டணம், வழக்கறிஞர் கட்டணம் மற்றும் மதிப்பீட்டு கட்டணம் போன்ற செலவுக்கான 100 சதவிகிதம் வரையிலான நிதியையும் 35 ஆண்டுகால தவணையில் பெற வாய்ப்பு உள்ளது என்று பிஎஸ்என் தலைமை நிர்வாக அதிகாரி ஜே கெய்ரில் கூறினார். பிகேஎன்எஸ் வீடு வாங்குபவர்கள் www.bsn.com என்ற இணையதளத்தின் மூலம் RM50,000 மதிப்புள்ள வீட்டு அலங்காரப் பரிசுகளைப் பற்றிய கூடுதல் தகவல்களை பெறலாம்.



# சேதமடைந்த சாலை மேம்பாட்டு பணிகள் தொடங்கியது

**ஷா ஆலம்,** இம்மாதம் மாநிலம் முழுவதும் பெருமளவில் சேதமடைந்த சாலைகளின் மேம்பட்டு பணிகள் தொடங்கப் பட்டுள்ளதாக உள்கட்டமைப்பு மற்றும் பொது வசதிகள் எக்ஸ்கோ தெரிவித்துள்ளது.

இத்திட்டம் RM50 மில்லியன் செலவில் பொதுமக்களின் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கு சிலாங்கூரில் முழுமையாக சாலை செப்பனிடும் பணிகளை செயல்படுத்தப்படுவதாக ஐ ஆர் இஷாம் அசீம் கூறினார்.

"20,000க்கும் மேற்பட்ட சாலைகள் மேம்படுத்தப்பட வேண்டிய நிலையில் உள்ளன. ஆனால், அதிக வாகனங்களின் எண்ணிக்கையால் இந்த நடவடிக்கையை மேற்கொள்வது கடினமாக உள்ளது. சாலைகளின் பயன்பாடு அதிகமாக இருப்பதால் நிலம் பலவீனமடைந்து எளிதில் சேதமடைகின்றன.

"அந்த காரணத்திற்காகச் சாலைகளை நிர்வகிக்க ஒரு வருடத்திற்கு RM500 மில்லியனுக்கும் அதிகமாக செலவிடுகிறோம். இந்த ஆண்டு நாங்கள் RM50 மில்லியன் செலவில் நிர்வகிக்கப்படாதச் சாலைகளை மேம்படுத்த உள்ளோம்" என்று இன்று டிவி 1 சேனலில் செலமட் பாகி மலேசியா நேர்காணல் நிகழ்ச்சியில் அவர் கூறினார்.

மாநில நிர்வாகத்தின் கீழ் உள்ள சாலைகளின் பராமரிப்பு மற்றும் விரிவாக்கத்தை உள்ளடக்கிய ஒரு மெகா சாலை மேம்பாட்டு திட்டத்தை ஜனவரி 16 அன்று டத்தோ மந்திரி புசார் அறிவித்தார்.

# ஜனவரி முதல் மார்ச் வரை - வெ.18,473 கோடி முதலீட்டு வாய்ப்பு

**கோலாலம்பூர்,** இவ்வாண்டு ஜனவரி முதல் மார்ச் வரை ஒன்பது நாடுகளுக்குப் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் மேற்கொண்ட அதிகாரப்பூர்வ மற்றும் முதலீட்டு, வர்த்தக ஊக்குவிப்புத் பயணங்கள் வாயிலாக அபரிமித முதலீட்டு மற்றும் ஏற்றுமதி வாய்ப்புகளை மலேசியா பெற்றுள்ளது. இக்காலக்கட்டத்தில் 18,473 கோடி வெள்ளி மதிப்பிலான முதலீட்டு வாய்ப்புகளும் 322 கோடி வெள்ளி மதிப்பிலான ஏற்றுமதி வாய்ப்புகளும் பெறப்பட்டதாக



பிரதமர் துறை அமைச்சர் (சபா,சரவா மற்றும் சிறப்பு விவகாரங்கள்) டத்தோ அர்மிஸான் முகமது அலி கூறினார். இந்த மூன்று மாத காலத்தில் இந்தோனேசியா, புருணை, சிங்கப்பூர், தாய்லாந்து, துருக்கி, பிலிப்பைன்ஸ், சவூதி அரேபியா, கம்போடியா, சீனா ஆகிய நாடுகளுக்கு பிரதமர் வருகை மேற்கொண்டதாக அவர் சொன்னார். இவ்வாண்டு மார்ச் வரை பிரதமர் வெளிநாடுகளுக்கு மேற்கொண்ட பயணத்திற்கான செலவினம் மற்றும் அந்த பயணத்தின் வாயிலாக நாட்டிற்கு கிடைத்த முதலீடுகள் குறித்து துவான் இப்ராஹிம் வினா தொடுத்திருந்தார்.

# மூன்று சட்டமன்ற தொகுதிகளையும் தக்க வைத்துக் கொள்ள முடியும்

**கோம்பாக்,** விரைவில் நடைபெறவிருக்கும் மாநிலத் தேர்தலில் செலாயாங் நாடாளுமன்றத் தொகுதியில் உள்ள மூன்று சட்டமன்றங்களையும் தக்க வைத்துக் கொள்ள முடியும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி நம்பிக்கைத் தெரிவித்துள்ளார்.

செலாயாங் நாடாளுமன்றத் தொகுதி நிலையிலான நோன்புப் பெருநாள் பொது உபசரிப்பில் பொது மக்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டது இந்த நம்பிக்கைக்கு ஆதாரமாக விளங்குவதாக அவர் சொன்னார்.

செலாயாங் மற்றும் தாமான் டெம்ப்ளர் தொகுதிக்கு வந்த போது கடந்தாண்டைப் போலவே இவ்வாண்டும் அதிகமானோர் வருகை புரிந்துள்ளதை காண முடிந்தது என்று அவர் குறிப்பிட்டார். மக்கள் நமக்கு தொடர்ந்து ஆதரவளித்து வருவதற்கான அறிகுறியாகவும் அடையாளமாகவும் இது விளங்குவதோடு செலாயாங் நாடாளுமன்றத் தொகுதியிலுள்ள மூன்று சட்டமன்றங்களையும் வெற்றி கொள்ள முடியும் என்ற நம்பிக்கையையும் இது ஏற்படுத்துகிறது என அவர் தெரிவித்தார்.

இங்குள்ள டத்தாரான் இல்மு பண்டார் பாரு செலாயாங்கில் நேற்று நடைபெற்ற செலாயாங் நாடாளுமன்றம் மற்றும் தாமான் டெம்ப்ளர் சட்ட மன்ற நிலையிலான நோன்புப் பெருநாள் பொது உபசரிப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் கூறினார்.

இந்த உபசரிப்பில் செலாயாங் நாடாளுமன்ற உறுப்பினர் வில்லியம் லியோங் மற்றும் தாமான் டெம்ப்ளர் சட்டமன்ற உறுப்பினர் முகமது சானி ஹம்சான் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த செலாயாங் நாடாளுமன்றத் தொகுதியில் தாமான் டெம்ப்ளர், ரவாங் மற்றும் குவாங் ஆகிய மூன்று சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. பல்லின மக்களிடையே காணப்படும் அணுக்கமான ஒத்துழைப்பு மற்றும் நட்புறவின் காரணமாக இத்தொகுதிகளை தக்க வைத்துக் கொள்ள முடியும் என்றும் அமிருடின் சொன்னார்.

## இலக்குகளை வரைவதில் - சிலாங்கூர் ஆர்.எஸ்.-1 திட்டத்தை வழிகாட்டியாகக் கொள்வீர்

**ஷா ஆலம்,** திட்டங்கள் அல்லது மேம்பாட்டுக் கொள்கைகளுக்கான இலக்குகளை வரைவதில் முதலாவது சிலாங்கூர் திட்டத்தை (ஆர்.எஸ்.-1) வழிகாட்டியாகக் கொள்ளும்படி அரசு துறைகளை மந்திரி புசார் வலியுறுத்தியுள்ளார்.

அடுத்த ஐந்தாண்டுகளுக்கான திட்ட வரைவை உள்ளடக்கிய இந்த முதலாவது சிலாங்கூர் திட்டத்தில் பொருளாதாரத்திற்கு உத்வேகம் அளிக்கும் வழி முறைகளோடு தொழில்துறை மையமாகவும், விவேக மாநிலமாகவும் சுபிட்சம் மற்றும் மக்கள் வசிப்பதற்கு உகந்த மாநிலமாகவும் சிலாங்கூரை உருவாக்குவதற்குரிய வியூகங்களும் திட்டங்களும் உள்ளடங்கியுள்ளன என்று டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

கோவிட்-19 பெருந்தொற்றுப் பரவலுக்குப் பின்னர் மாநிலத்தை மேம்படுத்துவதற்காகவும் சமூக பொருளாதார நிலையை உயர்த்தி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளைக் களைவதற்காகவும் நன்கு திட்டமிட்டு வடிவமைக்கப்பட்ட திட்டமாக இந்த முதலாவது சிலாங்கூர் திட்டம் விளங்குகிறது என அவர் குறிப்பிட்டார். மாநில மேம்பாடு, அடிப்படை வசதிகள், தொழில் துறை மேம்பாடு மற்றும் பொது போக்குவரத்து ஆகிய திட்டங்களைப் பின்னணியாகக் கொண்ட பெருந்திட்ட செயலறிக்கையே இந்த முதலாவது சிலாங்கூர் திட்டமாகும் என்றும் அவர் சொன்னார்.

இது நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட திட்டமாக விளங்குகிறது. அரசாங்கத் திட்டங்களை மட்டுமின்றி தனியார் மேம்பாட்டுத் திட்டங்களையும் இது உள்ளடக்கியுள்ளது. பன்னிரண்டாவது மலேசியத் திட்டத்தில் (ஆர்.எம்.கே.-1) இடம் பெற்றுள்ள அம்சங்கள் எதுவும் விடுபடாமலிருப்பதை உறுதி செய்வதை இந்த முதலாவது சிலாங்கூர் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது என்றார் அவர்.

நேற்று இங்கு நடைபெற்ற சிலாங்கூர் மாநில அரசின் சிறந்த ஊழியர்களுக்கான விருதளிப்பு விழாவில் உரையாற்றிய போது அவர் இவ்வாறு தெரிவித்தார் நோக்கமாகக் கொண்டுள்ளது என்றார் அவர். நேற்று இங்கு நடைபெற்ற சிலாங்கூர் மாநில அரசின் சிறந்த ஊழியர்களுக்கான விருதளிப்பு விழாவில் உரையாற்றிய போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.



## 15 டயாலிசிஸ் மையங்கள்
### அடுத்தாண்டு செயல்படத் தொடங்கும்

**ஷா ஆலம்,** மாநிலத்தில் நீரிழிவு நோயாளிகளின் தேவையை ஈடுசெய்வதற்காக அடுத்தாண்டு தொடங்கி 15 டயாலிசிஸ் இரத்த சுத்திகரிப்பு மையங்கள் செயல்படும் என்று மந்திரி புசார் கூறினார்.

டயாலிசிஸ் நோயாளிகளுக்கு உதவும் நோக்கில் ஏற்கனவே ஐந்து டயாலிசிஸ் மையங்கள் இயங்கி வந்த வேளையில் கூடுதலாக அத்தகைய10 மையங்களை அமைக்க மாநில அரசு இணக்கம் தெரிவித்துள்ளதாக டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

கடந்த 2010ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வரும் இலவச டயாலிசிஸ் சேவைத் திட்டத்தில் மேலும் 10 மையங்களை இணைப்பதன் மூலம் அடுத்தாண்டில் இம்மையங்களின் எண்ணிக்கை 15ஆக உயரும் என்று அவர் தனது பேஸ்புக் பதிவில் கூறினார்.

ஐந்து டயாலிசிஸ் மையங்களுடன் கடந்த 2010ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வந்த புசாட் டயாலிசிஸ் ராக்யாட் என்றத் திட்டம் தற்போது டயாலிசிஸ் மெஸ்ரா சிலாங்கூர் என்ற பெயரில் உருமாற்றம் செய்யப்படுவதாக நகர்ப்புற நல்வாழ்வுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ரோட்சியா இஸ்மாயில் முன்னதாக கூறியிருந்தார்.

புதிய டயாலிசிஸ் மையங்கள் கிள்ளான், அம்பாங், செலாயாங் போன்ற பகுதிகளில் உள்ள மக்கள் குடியிருப்பு பகுதிகளில் அமைக்க-ப்படும் என்றும் அவர் தெரிவித்திருந்தார். ஒவ்வொரு டயாலிசிஸ் மையத்திலும் மாதம் 200 பேர் வரை இரத்த சுத்திகரிப்பு சேவையைப் பெற்று வருகின்றனர்.

## சுகாதார கிளினிக்கில்
### பொது வசதியை மேம்படுத்த RM 50,000 ஒதுக்கீடு

**ஷா ஆலம்,** உலு சிலாங்கூரில் உள்ள உலு யாம் பாரு சுகாதார கிளினிக் பகுதியின் வாகன நிறுத்துமிட வசதியை மேம்படுத்தவும், சாலை அமைக்கவும் 50,000 ரிங்கிட் ஒதுக்கப்பட்டுள்ளது.

சிலாங்கூர் பென்யாயாங் திட்டம் (PSP) 1-ல் மூலம்தான் இந்த ஒதுக்கீடு பெறப் பட்டது என்று முகநூல் மூலம் பத்தாங் காலி தொகுதியின் ஒருங்கிணைப்பாளர் சைபுடின் ஷாபி முஹம்மது தெரிவித்தார்.

"இச்சாலை மிகவும் மோசமான நிலைமையில் இருந்ததால் போக்குவரத்துக்குக் கடினமாக இருந்தது. அதனால்தான் அவ்விடம் மேம்படுத்த உள்ளது.

இந்த சுகாதாரக் கிளினிக்கு நாள் ஒன்றுக்கு 200க்கும் மேற்பட்டோர் வந்து செல்வதாகவும், வரும் நோயாளிகளின் வசதிக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் அவர் முகநூலில் தெரிவித்துள்ளார்.

மேம்படுத்தப்பட உள்ள வசதிகள் பயனர்கள் மற்றும் கிளினிக் ஊழியர்களுக்குப் பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது என்றார்.

டத்தோ மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி அவர்கள் 2023 பட்ஜெட்டில், உள்ளூர் மக்களின் நலனுக்காக சிறிய திட்டங்களை மேற்கொள்வதன் மூலம் உள்ளூர் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் மற்றும் மேம்படுத்தும் முயற்சியாகச் சிலாங்கூர் பென்யாயாங் திட்டத்தின் கீழ் மொத்தம் RM28 மில்லியன் ஒதுக்கப்பட்டதாக அறிவித்தார்.

# ஐ-சீட் வாயிலாக - சரஸ்வதிக்கு முக ஒப்பனை சாதனங்கள் விநியோகம்



**காஜாங்,** குறைந்த வருமானம் பெறும் தரப்பைச் சேர்ந்த தொழில் முனைவோருக்கு வர்த்தக உபகரணங்களை வழங்கி அவர்களை பொருளாதார ரீதியில் உயர்த்தும் உன்னதப் பணியை ஐ-சீட் எனப்படும் சிலாங்கூர் இந்தியர் சமூக மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு இலாகா மேற்கொண்டு வருகிறது. சமூக பொருளாதாரத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.கணபதிராவ் தலைமையில் செயல்படும் இந்த அமைப்பின் வாயிலாக நூற்றுக்கணக்கான இந்திய தொழில் முனைவோர் இதுவரை பலன் பெற்றுள்ளனர். அந்த வகையில் காஜாங், தாமான் புக்கிட் மேவாவில் முக ஒப்பனைத் தொழிலில் ஈடுபட்டு வரும் எஸ். சரஸ்வதிக்கு 7,000 வெள்ளி மதிப்பிலான மூன்று விதமான முக மற்றும் சிகையலங்கரிப்பு சாதனங்கள் இங்கு நடைபெற்ற நிகழ்வொன்றில் வழங்கப்பட்டன.

வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்து நடத்தி வரும் இந்த ஒப்பனைத் தொழிலை விரிவாக்கம் செய்யும் நோக்கில் சரஸ்வதி செய்த விண்ணப்பத்தை ஏற்று உபகரணங்களை வழங்கிய ஐ-சீட் பொறுப்பாளர்களுக்கு தாம் நன்றி தெரிவித்துக் கொள்வதாக அவர் சொன்னார்.

இந்த வர்த்தக உபகரணங்களை ஒப்படைக்கும் நிகழ்வில் உலு லங்காட் ஐ- சீட் நடவடிக்கை அதிகாரி ஆர்.குகநாதன், காஜாங் நகராண்மைக் கழக உறுப்பினர் பாலமுரளி ஆகியோரும் கலந்து கொண்டதாக ராஜ்குமார் தெரிவித்தார்.



# அணிச்சல் தயாரிக்கும் பயிற்சி

**கோல சிலாங்கூர்,** இந்தியப் பெண்களுக்கு கைத்தொழில்களை கற்றுக் கொடுத்துப் பொருளாதாரத் துறையில் ஊக்குவிக்கும் சித்தம் சிலாங்கூர் முயற்சியில் கோல சிலாங்கூர் மாவட்ட நகராண்மைக் கழகம் ஏற்பாட்டில் அணிச்சல் தயாரிக்கும் பயிற்சி பட்டறை ஒன்று தாமான் பஞ்சாரான் பாலாய் ராயாவில் நடைபெற்றது.

இந்தப் பயிற்சி பட்டறையில் சுமார் 32 – பெண்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். கோல சிலாங்கூர் நகராண்மை கழக உறுப்பினர் திரு :குணசேகரன் சுப்ரமணியம் அணிச்சல் பயிற்சி பட்டறை நிகழ்வுக்கு வருகை புரிந்த அனைவருக்கும் நன்றியை கூறி வரவேற்றார். இந்த 5 – மணி நேர நிகழ்வில் கற்றுக் கொள்வதை, மறக்காமல் இருக்க பங்கேற்பாளர்களை அவர்கள் வீடுகளில் மீண்டும் கேக் செய்து பார்க்கக் கேட்டுக்கொண்டார்.

இதனை அடுத்து இந்த அணிச்சல் தயாரிப்பு பட்டறைக்கு சிறப்பு விருந்தினராக வருகை அளித்த கோலசிலாங்கூர் கெஅடிலான் தலைவர் திரு : தீபன் சுப்ரமணியம் பெண்கள் பல வியாபாரத்தில் முன்னேறி வருகின்றனர். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, வெற்றியாளராக வாழ்த்துக்கள் எனக் கூறி, அரசாங்கம் உங்கள் முயற்சிக்கு ஆதரவாகப் பல திட்டங்களைக் கொண்டுள்ளது என்றார்.

இந்த அணிச்சல் செய்யும் பயிற்சி பட்டறை அதற்கு ஓர் ஆதாரம். ஆர்வம் உள்ளவர்கள் மட்டுமே அதன் பலனை அடைவார்கள். இந்தப் பயிற்சி வாய்ப்புகள் கிடைக்காவிட்டால் கட்டணம் செலுத்தி அதை கற்றுக்கொள்ள வேண்டும். அதனால் சாதாரண மக்களின் முன்னேற்றங்கள் தடைபடுகிறது.

ஆனால், நீங்கள் அதிர்ஷ்டசாலிகள் நீங்கள் அனைவரும் இலவசமாக இன்றைய அணிச்சல் பயிற்சி பட்டறையில் கலந்து கொள்ள வாய்ப்பு கிடைத்துள்ளது. இதன் வழி உணவு வியாபாரத் துறையில் வெற்றி பெற அவர் வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்.

இப்பயிற்சிக்கு வருகை அளித்த அனைத்து பெண்களுக்கும் நற்சான்றிதல், அணிச்சல் தயாரிக்க ஒரு (மிக்சர்) இயந்திரம் வழங்கப்பட்டு, இந்த பயிற்சி பட்டறை நண்பகல் 2:00 – மணி அளவில் சிறப்பாக முடிவுற்றது.



# "சித்தம்" ஏற்பாட்டில் குழந்தை பராமரிப்பு பயிற்சி

**ஷா ஆலம்,** "சித்தம்" எனப்படும் சிலாங்கூர் இந்திய தொழில் ஆர்வலர் மையம் மாநிலத்திலுள்ள அனைத்து தொகுதிகளிலும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை நடத்தி வருகிறது.

குறைந்த வருமானம் பெறும் தரப்பிரைச் சேர்ந்தவர்கள் குறிப்பாக மகளிர் உபரி வருமானம் பெறுவதற்கு உதவும் நோக்கிலான இந்த திட்டங்களை அந்தந்த தொகுதியிலுள்ள இந்திய சமூகத் தலைவர்கள் முன்னின்று ஏற்பாடு செய்து வருகின்றனர்.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக பலாக்கோங் தொகுதி இந்திய சமூகத் தலைவர் கிறிஸ்டி லுயிஸ் பிரான்சிஸ் ஏற்பாட்டில் மகளிருக்கான மகப்பேறு மற்றும் குழந்தை பராமரிப்பு பயிற்சி நடத்தப்பட்டது.

இந்த ஒரு நாள் பயிற்சியில் பிரசவத்திற்குப் பிந்தைய தாய், சேய் பராமரிப்பு மற்றும் பாரம்பரிய வைத்திய முறைகள் குறித்து தெளிவாக விளக்கம் தரப்பட்டது. இங்குள்ள தாமான் மூர்னி சமூக மண்டபத்தில் காலை 9.30 மணி தொடங்கி மாலை 4.00 மணி வரை நடைபெற்ற இந்த பயிற்சியில் தொகுதியைச் சேர்ந்த 20 மகளிர் பங்கு கொண்டு பயனடைந்தனர்.

இந்த பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ், மூலிகைகள், அசல் தேங்காய் எண்ணெய் உள்ளிட்ட பொருள்கள் வழங்கப்பட்டன. இப்பயிற்சியில் பங்கு கொண்டவர்கள் சுற்றுவட்டாரத்தில் உள்ள தாய்மார்களுக்கு பிரசவத்திற்குப் பிந்தைய பயிற்சியை வழங்குவதற்கும் அதன் மூலம் உபரி வருமானம் பெறுவதற்கும் இந்த பயிற்சி துணை புரியும் என்று கிறிஸ்டி நம்பிக்கைத் தெரிவித்தார்.

இந்த பயிற்சியை நடத்துவதற்கு தங்களுக்குத் பெரிதும் துணை புரிந்த சித்தம் நிர்வாகி எஸ்.கென்னத் சேம் மற்றும் அதன் பொறுப்பாளர்களுக்கும் தாம் நன்றி தெரிவித்துக் கொள்வதாக அவர் சொன்னார்.

# ஹிஜ்ரா மூலம் வர்த்தகக் கடனுதவி

ஷா ஆலம், யாயாசான் ஹிஜ்ரா சிலாங்கூர் (ஹிஜ்ரா) வாயிலாக கடந்த மார்ச் மாதம் 481 தொழில்முனைவோர் வர்த்தகக் கடனுதவியைப் பெற்றுள்ளனர். ஹிஜ்ராவின் ஐ-பிஸ்னஸ் கடனுதவிதி திட்டத்தின் மூலம் மொத்தம் 47 லட்சம் வெள்ளி அந்த தொழில்முனைவோருக்கு வழங்கப்பட்டதாக அந்த வர்த்தக கடனுதவிக் கழகத்தின் நடவடிக்கை பிரிவு தலைமை நிர்வாகி ஷஹாருடின் யாக்கோப் கூறினார். வர்த்தகத்தை விரிவாக்கம் செய்ய விரும்பு-வோருக்கு குறிப்பாக பெருநாள் சமயங்களில் நிதி தேவைப்படுவோருக்கு ஹிஜ்ரா தொடர்ந்து உதவி வழங்கி வந்துள்ளதாக அவர் சொன்னார்.

யாயாசான் ஹிஜ்ரா ஏற்பாட்டில் இங்குள்ள செக்சன் 7, இளைஞர் மற்றும் விளையாட்டு மையத்தில் நேற்று நடைபெற்ற நோன்புப் பெருநாள் பொது உபசரிப்பில் கலந்து கொண்டப் பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.




கடந்த ரமலான் மாதத்தின் போது ஐ-பெர்மூசிம் திட்டத்தின் கீழ் கடனுதவிக்கு விண்ணப்பம் செய்த 15 பேருக்கு 106,000 வெள்ளி வழங்கப்பட்டதாக அவர் மேலும் சொன்னார்.

பெருநாள் சந்தைகளில் வியாபாரம் செய்ய விரும்பும் வணிகர்களுக்கு உதவும் நோக்கிலான இந்த திட்டத்தின் கீழ் வெ.2,000 முதல் வெ.20,000 வரை கடனுதவி வழங்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

# புயல் காற்றில் பாதிக்கப்பட்ட பள்ளிகளைச் சீரமைக்க அவசர நிதி




**புத்ராஜெயா,** சில தினங்களுக்கு முன்னர் ஏற்பட்ட கடும் புயலின் விளைவாக கோலாலம்பூர் மற்றும் சிலாங்கூரில் சேதமடைந்த 36 பள்ளிகளை சீர் செய்ய கல்வி அமைச்சு அவசரகால நிதியை உடனடியாக ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்த ஒதுக்கீடு கோலாலம்பூர் கூட்டரசு பிரதேச கல்வித் துறைக்கும் சிலாங்கூர் மாநிலக் கல்வித் துறைக்கும் அனுப்பப்படும் என்று கல்வியமைச்சு இன்று ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை வீசிய கடும் புயல் காற்றில் கோலாலம்பூரில் 27 பள்ளிகளுக்கும் சிலாங்கூரில் 9 பள்ளிகளுக்கும் சேதம் ஏற்பட்டது.

கூட்டரசு பிரதேச கல்வி இலாகா, சிலாங்கூர் கல்வி இலாகா மற்றும் மாவட்ட கல்வி அலுவலகம் ஆகியவை பொதுப்பணித் துறையின் ஒத்துழைப்போடு பள்ளிகளில் ஏற்பட்ட சேதங்களை மேலும் மதிப்பீடு செய்யும் என்று கல்வியமைச்சு அறிக்கை ஒன்றில் தெரிவித்தது.

அதன் பின்னர் இது தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை மற்றும் செலவு மதிப்பீட்டு அறிக்கையை பொதுப்பணித் துறை கல்வியமைச்சிடம் சமர்ப்பிக்கும். இதனைத் தொடர்ந்து அவசர கால சேதங்களை சரிசெய்யும் நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி மாநில கல்வித் துறைகளுக்கு கூடிய விரைவில் விநியோகிக்கப்படும் என்று அது கூறியது.

மாணவர்களின் கற்பித்தல் மற்றும் கற்றல் நடவடிக்கைகள் எந்த தடங்கலும் இல்லாமல் தொடர்வதற்கு ஏதுவாக பள்ளிகளை சீரமைப்பு செய்யும் பணிகள் விரைந்து மேற்கொள்ளப்படும் என்று அமைச்சு உறுதியளித்தது.

# 2026 ஆம் ஆண்டு பள்ளி - முன்பு போலவே ஜனவரிக்கு திரும்பும்



**புத்ராஜெயா,** 2024/2025 பள்ளி அமர்வு மார்ச் 2024 இல் தொடங்கும் மற்றும் 2025 இல் அமர்வு பிப்ரவரி 2025 இல் தொடங்கும் என்று கல்வி அமைச்சகம் (கேபிஎம்) தெரிவித்துள்ளது. இன்று ஒரு அறிக்கையில் 2026 பள்ளி அமர்வு முன்பு போலவே ஜனவரிக்கு திரும்பும் என்று கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து, செயல்படுத்தப்படும் பள்ளிக் கல்வி நாட்காட்டியில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப, பொதுத் தேர்வு அட்டவணையும் சீரமைக்கப்படும் எனவும் கல்வி அமைச்சகம் தெரிவித்தது.

கல்வி (விதிமுறைகள், நாட்கள் மற்றும் பள்ளி விடுமுறைகள் ஒழுங்குமுறைகள் 1998ன் அடிப்படையில் இந்த பரிசீலனை மேற்கொள்ளப் பட்டதாகக் கல்வி அமைச்சகம் கூறியது. மேலும், கல்வி நாட்காட்டியில் பள்ளி நாட்களின் எண்ணிக்கை 190 நாட்களுக்கு குறைவாக இருக்கக் கூடாது. பள்ளி அமர்வு 2026 இல் மீண்டும் ஜனவரி தொடங்கும் என்று கல்வி அமைச்சர் ஃபத்லினா சிடெக் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

# மக்களிடையே ஒற்றுமையை ஊக்குவிக்கும் 'ஒற்றுமை வாரம்'

**கோலாலம்பூர்,** இந்த நாட்டின் மக்களிடையே ஒற்றுமையை வளர்ப்பதற்கான ஒற்றுமை வாரத்தை ஏற்பாடு செய்வது மிகவும் முக்கியம் என்று பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.

அதுமட்டுமின்றி ஒற்றுமை வாரத்தின் மூலம் மலேசியர்களுக்கு தேசபக்தியை புகட்டும் தேசியப் பிரிவுகள் மற்றும் கலாச்சார பன்முகத்தன்மை தொடர்பான அறிவு, புரிதல் மற்றும் போற்றுதல் போன்று கூறுகளைப் பரப்ப முடியும் என்று அவர் கூறினார்.

கூச்சிங்கில் நேற்று நடைபெற்ற தேசிய அளவிலான ஒருமைப்பாட்டு வார விழாவில் கலந்து கொண்டதாக முகநூல் பக்கத்தில் பிரதமர் தெரிவித்துள்ளார்.

'வேற்றுமையில் ஒற்றுமை' என்ற கருப்பொருளில் நடைபெற்ற இந்நிகழ்வு



யாங் டி-பெர்துவான் அகோங் அல்-சுல்தான் அப்துல்லா ரியாதுடின் அல்-முஸ்தபா பில்லாஹ் ஷா அவர்களால் அதிகாரப்பூர்வமாக தொடக்கி வைக்கப்பட்டது.

இந்த இணக்கமான விழாவில் சரவாக் மாநிலத் தலைவர் துன் அப்துல் தைப் மஹ்மூட், சரவாக் பிரதமர் டான்ஸ்ரீ அபாங் ஜோஹாரி துன் ஓபேங் மற்றும் துணைப் பிரதமர் டத்தோஸ்ரீ ஃபாடில்லா யூசோப் மற்றும் அமைச்சர்களும் கலந்து கொண்டனர்.

இந்த ஒற்றுமை வாரம் மே 20 முதல் 28 வரை பினாங்கில் உள்ள டதாரான் பெர்தாம், சபாவில் உள்ள மஸ்யராகத் பாப்பர் மண்டபம் , ஜொகூரில் உள்ள டதாரான் தாசிக் குளுவாங் மற்றும் பஹாங்கில் உள்ள குவாந்தான் பான்தாய் பலோக் பொழுதுபோக்கு மையம் உள்ளிட்ட 15 இடங்களில் நடைபெறும்.

# பள்ளி விடுதியில் பகடிவதை - மாணவர்கள் தடுப்பு காவலில்




**பாலிக் புலாவ்,** கடந்த வியாழன் அன்று பாலிக் புலாவ்வில் உள்ள மஜ்லிஸ் அமானா ரக்யாடின் (மாரா) கீழ் உள்ள இடைநிலைக் கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த ஐந்தாம் படிநிலை மாணவர்களை பள்ளியின் மூன்றாம் படிவ மாணவரை பகடிவதை செய்ததன் தொடர்பாக வழக்கை விசாரிக்க உதவுவதற்காக காவலில் வைக்கப்பட்டனர்.

அம்மாணவர்கள் அனைவரிடமிருந்தும் வாக்குமூலம் பெற்றுக் கொண்ட பிறகு ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர் என்று தென்மேற்கு மாவட்டக் காவல்துறை தலைவர் சூப்பரின்டெண்டன்ட் கமருல் ரிசால் ஜெனால் தெரிவித்தார்.

"மேலும் விசாரணைகள் நடந்து வருகின்றன. தண்டனைச் சட்டப்பிரிவு 147 இன் கீழ் வழக்கு இந்த வழக்கு விசாரிக்கப்படுகிறது," என்று அவரைத் தொடர்பு கொண்டபோது கூறினார். இரவு 11 மணியளவில் நடந்த இச்சம்பவம், பாதிக்கப்பட்ட மாணவன் காலை தொழுகைக்குத் தாமதமாக வந்ததால் நடந்திருக்கக்கூடும் எனவும் மூத்த மாணவர்கள் தாக்கியதில் அம்மாணவனுக்குக் காயங்கள் ஏற்பட்டிருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது. பாதிக்கப்பட்ட மாணவர் காவல்துறையில் புகார் செய்வதற்கு முன்னதாகவே தனது தந்தையிடம் இச்சம்பவம் குறித்து தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

# ஞானக் கண்ணால் அதிசயம்
## மகிழம்பூ தமிழ்ப்பள்ளி மாணவி



**கோலாலம்பூர்,** கண்ணைக் கட்டிக் கொண்டு தனது ஞானக் கண்ணால் அதிசயம் படைத்துள்ளார் மகிழம்பூ தமிழ்ப்பள்ளி மாணவி புனிதமலர். அம்மாணவி கண்ணைக் கட்டிக் கொண்டு பொருள்களைத் தடவியும் அல்லது தொட்டு பார்த்தும் அதன் நிறங்களையும் மற்றும் எண்களையும் சரியாகச் சொல்லும் திறனைப் பெற்றுள்ளார்.

திரு இராஜசேகர் திருமதி சிவசங்கரி தம்பதினரின் ஒரே புதல்வி ஆவார் புனிதமலர். இம்மாணவி தனது சிறு வயது முதல் மனனம் செய்வதில் அதிக நாட்டம் காட்டியுள்ளார். இதன்மூலம் பள்ளியில் நடைபெறும் கதை மற்றும் பேச்சுப் போட்டிகளில் வெற்றி வாகை சூடியிருக்கும் அம்மாணவியின் திறமையைக் கண்டு பள்ளி நிர்வாகம் அவரை "சூப்பர் மெமோரி" எனும் நினைவற்றால் பயிற்சி ஒன்றில் கலந்து கொள்ள ஊக்குவித்தது.

புனிதமலர் சூப்பர் மெமோரி பயிற்சியில் தொடர்ந்து நான்கு மாதம் கலந்து கொண்டு தன்னிடம் உள்ள திறமையால் மிக விரைவாக அதில் உள்ள நுட்பங்களையும் நுணுக்கங்களையும் கற்று கொண்டார்.

அதன் பின்னர், தன்னால் கண்களை மூடியவாறு பொருட்களின் நிறங்களைச் சொல்ல முடியும் என்ற தனித்திறமை தன்னிடம் ஒளிந்திருந்ததைக் கண்டறிந்ததாக புனிதமலர் கூறினார். மேலும், தன்னிடம் உள்ள திறமையை எண்ணி அம்மாணவி பெருமிதம் அடைந்தார். அதுமட்டுமில்லாமல் அப்பயிற்சிக்குச் செல்லுவதால் தன்னால் நாள் முழுவதும் உற்சாகமாக இருக்க முடிகிறது என்றார்.

# சிறுவர் பாடல் திறன் போட்டி பத்து
## போட்டியாளர்கள் இறுதிச் சுற்றுக்குத் தேர்வு




**கிள்ளான்,** சிலாங்கூர் மாநில செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் துவான் டாக்டர் குணராஜ் தலைமையில் சிலாங்கூர் சிறுவர் பாடல்திறன் போட்டி கிள்ளான் டேவான் ஹம்சாவில் சிறப்பாக நடைபெற்றது. இந்த சிறப்புமிக்க நிகழ்ச்சியில் ஹெமித்திரா இரவிசந்திரன் ரி.ம. 2,000.00 ரொக்கமும் வெற்றிக் கேடயத்தையும் தட்டி சென்றார்.

கடந்த 2021 ஆம் ஆண்டு தொடங்கிய இந்த " சிலாங்கூர் சிறுவர் பாடல் திறன் ". இவ்வாண்டு 130 சிறுவர்கள் முதல் சுற்றில் கலந்து கொண்டனர். இறுதி சுற்றுக்கு 10 போட்டியாளர்கள் தேர்வாகி சிறப்பாக தங்களது பாடல் திறனை வெளிப்படுத்தினர். தமிழ் நாட்டு கலைஞர்களுக்கு ஈடு கொடுக்கும் அளவில் தங்களது பாடல் திறனை வெளிப்படுத்தினர் என்று நீதிபதிகள் புகழாரம் சூட்டினர்.

இந்த போட்டி நிகழ்ச்சியில் செல்வன் ஹரிந்திரன் மோகன் இரண்டாவதாக ரி.ம. 1,500.00 ரொக்கமும் பரிசு கேடயத்தையும் தட்டி சென்றார். மூன்றாவதாக ஜனனி ஜெயகோபி ரி.ம. 1,000.00 மற்றும் கேடயத்தையும் தட்டிச் சென்றார். மேலும் நான்காவது பரிசு ரி.ம. 750.00, ஐந்தாவது பரிசு ரி.ம. 500.00 மற்றும் 6 முதல் 10 வது வரையிலான 5 வருக்கு ஆறுதல் பரிசாக தலா ரி.ம. 300.00 வழங்கப் பட்டது.

இந்த இறுதிச் சுற்றுக்கு தேர்வான அனைவருக்கும் நாடறிந்த புகழ்பெற்ற கலைஞர்களால் முறையாக பயிற்சி அளிக்கப்பட்டு பின்னர் மேடையில் பாடி, ரசிகர்களை மகிழ்ச்சி படுத்தினர். இப்போட்டியின் வழி நல்ல தரமான கலைஞர்களை உருவாக்குவதில் செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் முன்னணி வகிக்கிறார் என்றால் அது மிகையாகாது.

இந்நிகழ்ச்சியில் கிள்ளான் நாடாளுமன்றத்தின் முன்னாள் உறுப்பினர் சார்லஸ் சந்தியாகோ, அறப்பணி வேந்தர் செந்தமிழ் செல்வர் ஓம்ஸ் ப.தியாகராஜன், சிலாங்கூர் மாநில தமிழ் கலைஞர்கள் இயக்கத்தினர், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து சிறப்பித்தனர் என்பது குறிப்பிட தக்கது.

# சமூக சேவையோடு நகர மேம்பாடும்
## - பன்னீர் செல்வம்



**கோல லங்காட்,** நகராண்மைக் கழக உறுப்பினராக பன்னீர் செல்வம் கடந்த இரண்டு தவணையாக சேவையாற்றி வருகிறார்.

நகராண்மைக் கழக உறுப்பினர் என்ற முறையில் கோல லங்காட் வட்டாரம் முழுவதும் தீவிர சமூக சேவை செய்வதோடு நகராண்மைக் கழக மேம்பாட்டிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி கொண்டு வருகிறார்.

இத்தொகுதியில் உள்ள இந்திய சமுதாயம் எதிர்நோக்கும் சமூகவியல் பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டு வரும் இவர், தீபாவளி, நோன்பு பெருநாள், சீன புத்தாண்டு போன்ற பெரு நாட்களுக்கும் திறந்த இல்ல உபசரிப்பு நடத்துவதையும் தனது வருடாந்திர நடவடிக்கைகளாக கொண்டுள்ளார்.

இதனைத் தவிர்த்து வாய்க்கால், சாலை பராமரிப்பு மற்றும் சாலை செப்பனிடுதல் வேலைகளிலும் தாம் தீவிரம் காட்டி வருவதாக கூறிய அவர். ஆண்டுதோறும் சுதந்திர நாள் கொண்டாட்டமும் தனது முக்கிய நிகழ்வுகளில் ஒன்றாகும் என்றார்.

நாட்டு மக்களிடையே நாட்டுப்பற்று அதிகரிக்க சுதந்திர நாள் கொண்டாட்டம் வழி வகை செய்கிறது. ஒரு மாத காலத்திற்கு சுதந்திர நாள் கொண்டாட்டம் நடைபெறும். மலேசிய கொடி வீட்டுக்கு வெளியே பறக்க விடுதல், பள்ளி மாணவர்களுக்கு இலவச கொடி வழங்குதல் போன்ற நிகழ்வுகள் மாதம் முழுவதும் நடைபெறும். தொகுதி மக்களுக்கு தேவையான மருத்துவ உதவி, உடல் ஊனமுற்றவர்களுக்கு சக்கர நாற்காலி, காலணி, உதவி நிதி போன்றவற்றை தனது சேவையாக வழங்கி வருகிறார். அதே வேளையில் கோல லங்காட் நகர மன்றத்தின் இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைக்காக மரம் நடும் நடவடிக்கையிலும் தீவிரம் காட்டி வருகிறார்.

# எவரெஸ்ட் உட்பட்ட உலகின் ஏழு மலைகளின்
## உச்சியை அடைந்து நாகராஜன் சாதனை



**கோலாலம்பூர்,** எவரெஸ்ட் மலையின் உச்சியைத் தொட்டதன் மூலம் உலகில் ஏழு உயரமான மலைகளை ஏறிய இரண்டாவது மலேசியர் என்ற பெருமையை ஆர்.ஜே. நாகராஜன் பெறுகிறார்.

ஐம்பத்தொன்பது வயதுடைய நாகராஜன் உள்ளூர் நேரப்படி காலை மணி 10 .30 அளவில் அதாவது மலேசியா நேரப்படி நேற்று நண்பகல் 12.45 மணியளவில் எவரெஸ்ட் மலையை வெற்றிகரமாக ஏறியதாக ஜீரோ டு 8000 எனும் மலையேறும் அமைப்பின் நிறுவனரான காஃபிஷ் பாச்சோக் தெரிவித்தார்.

மலையேறுபவர்களின் உச்சபட்ச வெற்றி என்பது 8,848 மீட்டர் உயரம் கொண்ட எவரெஸ்ட் மலையின் உச்சியை தொடுவதுதான். அந்த சாதனையை நாகராஜன் அடைந்து- விட்டார் என அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தார்.

இதற்கு முன் டத்தோ முகமது முஹபர்டின் என்பவர் உலகின் ஏழு உயரமான மலைகளையும் ஏறிய முதல சாதனையாளர் என்ற பெருமையை பெற்றிருந்தார்.

தென் அமெரிக்கா, வட அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா, அண்டார்டிக்கா, ஆஸ்திரேலியா ஆசிய ஆகிய கண்டங்களில் உள்ள ஏழு உயர்ந்த மலைகளை ஏறியதன் வழி நாகராஜன் இந்த சாதனையைப் பெற்றுள்ளார்.

## உயர்கல்விக்கூட மாணவர்களுக்கு சிலாங்கூர் அரசின் 1,000 வெள்ளி வெகுமதி

### சிலாங்கூர் பென்யாயாங் திட்டம்

- உயர்கல்விக்கூடங்களில் நுழையும் சிலாங்கூரின் ஏழை மாணவர்களுக்கு 1,000 வெள்ளி வெகுமதியை மாநில அரசு கடந்த 15 ஆண்டுகளாக வழங்கி வருகிறது
- அது உயர்கல்விக் கூட மாணவர்களுக்கு ஊக்குவிப்பு வழங்குவதும் அவர்களை நிதிச் சுமைகளில் இருந்து விடுவிக்கும் திட்டம்.
- இந்த திட்டத்திற்கு மாநில அரசு 30 லட்சம் வெள்ளியை வருடாந்திர மானியமாக ஒதுக்கீடு செய்கிறது.
- இத்திட்டத்தில் மாநிலத்தைச் சேர்ந்த 3,000 மாணவர்களுக்கு ஆண்டு தோறும் பயன் கிடைக்கிறது
- மாதம் 5,000 வெள்ளிக்கும் குறைவான வருமானம் பெறும் சிலாங்கூர்வாசிகளின் பிள்ளைகள் இந்த வெகுமதிக்கு விண்ணப்பம் செய்ய முடியும்.
- அரசாங்க / தனியார் கல்விக் கூடத்தில் டிப்ளோமா, இளங்கலை / நான்காம் கட்ட திறன் சான்றிதழ் பயிற்சி வாய்ப்பு கிடைத்தவர்கள், படிப்பை தொடங்கிய முதலாம் ஆண்டில் விண்ணபிக்கலம்
- சிலாங்கூரில் பிறந்தவர்கள் அல்லது ஓராண்டுக்கும் மேலாக இங்கு வசிப்பவர்கள் விண்ணப்பிக்கலாம், மேலும் எஸ்.பி.எம். தேர்வுச் சான்றிதழ் இருக்க வேண்டும்.



## அரசியல் பிரச்சனைகளைச் சாமர்த்தியமாகக் கையாண்ட பேரரசர்

**ஷா ஆலம்,** நான்கு பிரதமர்களுடன் சேர்ந்து நாட்டை ஆண்ட ஒரே பேரரசர் அல்-சுல்தான் அப்துல்லா ரியாத்துதின் அல்-முஸ்தாபா பில்லா ஷா அவர்கள் ஆவார்.

நாட்டில் ஏற்பட்ட அரசியல் பிரச்சனைகளை "Langah Sheraton" என்ற ஆட்சி கவிழ்ப்பு மேற்கொண்ட வர்க்கத்தை கையாண்டவர் மட்டுமல்லாமல், இக்கட்டான கால கட்டத்தில், மிக சாதுரியமாக நாட்டை வழி நடத்திய பேரரசர் எதிர்வரும் ஜூன் 5 ஆம் திகதி தனது பிறந்தநாளை கொண்டாட உள்ளார். துன் டாக்டர் மகாதீர் முகமட் அவர்கள் கடந்த 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 22 அன்று, பிரதமர் பதவியிலிருந்து விலகிய பிறகு, பேரரசர் நாடாளுமன்ற உறுப்பினர்களை அரண்மனைக்கு அழைத்து அவர்களின் ஆதரவையும் கருத்துகளையும் அறிந்தார்.

மார்ச் 1 அன்று பேரரசர் அவர்கள் பிஎன் தலைவர் டான் ஸ்ரீ முகிடின் யாசினைப் பிரதமராக நியமித்தார். ஆனால் 17 மாதங்களுக்குப் பிறகு நாட்டில் மீண்டும் அரசியல் பிரச்சனை எழுந்தது. டான் ஸ்ரீ முகிடின் தனது நாடாளுமன்ற பெரும்பான்மையை நிரூபிக்க முடியாததால் டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாகோப் ஒன்பதாவது பிரதமராகப் பேரரசரால் நியமிக்கப்பட்டார். ஹராப்பான் தலைவர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் நாட்டின் 15வது பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் பொழுது, மீண்டும் எழுந்த பெரும்பான்மை ஆதரவு விவகாரத்தை மலாய் அரசர்கள் இசைவோடு பேரரசர் நல்ல முறையில் தீர்த்து வைத்தார். ஒரு ஒற்றுமை அரசை நிறுவி பத்தாவது பிரதமராக டத்தோ ஸ்ரீ அன்வாரை நியமித்து, சலசலப்புகளுக்கு முடிவு கட்டி மக்கள் போற்றும் பேரரசர் ஆனார். நாட்டின் நலம் காக்க அனைவரும் ஒன்றுபட்டு செயல்பட உத்தரவிட்டு ஒரு கூட்டாட்சிக்கும் வித்திட்டவர் இன்றைய மாமன்னர் என்று கூறினால் மிகையாகாது. நாட்டின் தலைவராக இருந்து வரும் பேரரசர் அவர்களின் ஆட்சி, எதிர்வரும் ஜனவரியில் நிறைவடைவது குறிப்பிடத்தக்கது.



## மருத்துவ முகாமில் 280 பேர் பங்கேற்றனர்

**ஷா ஆலம்,** கோத்தா டாமன்சாரா இந்திய சமூகத் தலைவர் தேவி முனியாண்டி ஏற்பாட்டில் நேற்று நடைபெற்ற இலவச மருத்துவப் பரிசோதனை இயக்கத்தில் சுமார் 280 பேர் பங்கு கொண்டு பயனடைந்தனர்.

இந்த இலவச மருத்துவப் பரிசோதனை இயக்கத்தில் இரத்த, சிறுநீர் சோதனை மற்றும் கண் பார்வை தொடர்பான சோதனையோடு பெக்கா பி40 எனப்படும் மத்திய அரசின் உதவித் திட்டத்திற்கான பதிவும் நடத்தப்பட்டதாக திருமதி தேவி முனியாண்டி கூறினார்.

இந்த மருத்துவ சோதனை இயக்கத்தில் கோத்தா டாமன்சாரா, கம்போங் காயு ஆரா, டாமன்சாரா டாமாய் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களோடு தொகுதிக்கு வெளியிருந்தும் மக்கள் கலந்து கொண்டதாக அவர் தெரிவித்தார். இந்த மருத்துவப் பரிசோதனை இயக்கத்திற்குப் பொதுமக்கள் மத்தியில் கிடைத்து வரும் ஆதரவைக் கருத்தில் கொண்டு தொகுதியின் இதர இடங்களிலும் இதுபோன்ற மருத்துவ பரிசோதனை இயக்கங்களை நடத்த தாங்கள் திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த மருத்துவப் பரிசோதனை இயக்கம் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு உதவி புரிந்த சிவராஜா, பெட்டாலிங் ஜெயா மாநகர் மன்ற உறுப்பினர்களான தாங் ஃபூய் கோ, ஜி.சுரேஷ் மற்றும் வட்டாரத் தலைவர்களுக்கும் தாம் நன்றி தெரிவித்துக் கொள்வதாக அவர் குறிப்பிட்டார்.

**கோம்பாக்,** சிலாங்கூர் மாநில விவசாய மேம்பாட்டுக் கழகத்தினால் (பி.கே.பி.எஸ்.) நடத்தப்படும் ஜெலாஜா ஏசான் ராக்யாட் மலிவு விற்பனை அனைத்து இன மக்களுக்கும் பயன் தருவது நிரூபணமாகியுள்ளது.

குறைந்த வருமானம் பெறும் தரப்பினர் மலிவான விலையில் அத்தியாவசியப் பொருள்களை வாங்குவதற்குரிய வாய்ப்பினை ஏற்படுத்தும் மாநில அரசின் இந்த திட்டத்தை தாம் பெரிதும் வரவேற்பதாக குடும்ப மாதான ஆர்.



## அனைத்து இனங்களுக்கும் - பயன் தரும் மலிவு விற்பனை

ரஞ்சனி (வயது 35) கூறினார். இந்த மலிவு விற்பனையில் பல்லின மக்களும் கலந்து கொள்வதைக் காண முடிகிறது. உதவி தேவைப்படும் மக்களுக்கு இந்த திட்டம் பெரிதும் துணை புரிகிறது. இன வேறுபாடின்றி அனைத்து மக்களும் நிதி நெருக்கடியை எதிர்நோக்குகின்றனர். அவர்கள் பணத்தை மிச்சப்படுத்துவதற்கு இத்தகைய மலிவு விற்பனைத் திட்டங்கள் பெரிதும் உதவியாக உள்ளன என்றார் அவர்.

கோழி, முட்டை போன்ற அத்தியாவசியப் பொருள்களை மலிவான விலையில் வாங்குவதற்குரிய வாய்ப்பினை வழங்கும் இத்திட்டம் குறித்து தாம் பெரிதும் மனநிறைவு கொள்வதாக ரஞ்சனி தெரிவித்தார். குறைந்த வருமானம் பெறும் பி40 தரப்பினரில் பெரும்பாலோர் ஷிப்ட் முறையிலும் வார இறுதி நாட்களிலும் வேலைசெய்ய வேண்டிய கட்டா-யத்தில் உள்ளனர். அவர்களுக்கு ஏற்ற வகையில் விற்பனை நேரத்தை இலகுவாக்கினால் மேலும் அதிகமானோர் பயன்பெறுவதற்குரிய வாய்ப்பு கிட்டும் என்றார் அவர்.



# மக்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதில் முன்னுரிமை

**சுபாங் ஜெயா,** மக்களின் நலன் கருதி அவர்கள் அளிக்கும் புகார்கள் மீது உடனடி நடவடிக்கை எடுப்பதில் முன்னுரிமை அளிக்கும்படி சுபாங் ஜெயா மாநகர் மன்ற (எம்.பி.எஸ்.ஜே.) பணியாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மக்கள் பிரச்சனைகளைத் தீர்ப்பது தொடர்பான நடவடிக்கை மற்றும் உத்தரவைப் பெறுவதற்கு மாநகர் மன்ற ஊழியர்கள் எந்நேரமும் தயார் நிலையில் இருக்க வேண்டும் என சுபாங் ஜெயா டத்தோ பண்டார் முகமது பவுஸி முகமது யாத்திம் கூறினார்.

மக்களின் பிரச்சனைகளைக் கண்டறிந்து அவற்றுக்குத் தீர்வு காண்பதில் அனைத்து ஊழியர்களும் மாநகர் மன்றத்தின் கண்களாகவும் காதுகளாகவும் செயல்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

உதாரணத்திற்கு, நாம் வரும் வழியில் குவிந்து கிடக்கும் குப்பைகள் அல்லது சாலையில் மூடப்படாதக் குழிகளைக் கண்டால் அடுத்தக் கட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக உடனடியாகச் சம்பந்தப்பட்ட துறைகளிடம் புகார் அளிக்க வேண்டும் என அவர் சொன்னார்.

புகார்களுக்கு முன்னுரிமை அளிப்பதன் வாயிலாக 1,600 ஊழியர்களைக் கொண்ட நாம் மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் முக்கிய பங்காற்றக்கூடிய குழுவாக விளங்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தக்கூடிய அதிகாரத் துஷ்பிரயோகம் மற்றும் தவறான நடத்தைகளை மாநகர் மன்ற ஊழியர்கள் தவிர்க்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். மாநகர் மன்ற ஊழியர்கள் தங்களின் ஒவ்வொரு செயலிலும் மிகுந்த கவனப் போக்கை கடைபிடிக்க வேண்டும் என்பதோடு முறையான வேலை நெறியையும் பின்பற்ற வேண்டும் என்றார் அவர்.

# சட்ட விரோதமாகக் குப்பை கொட்டும் பிரச்சனைக்குத் தீர்வு



**கிள்ளான்,** சட்ட விரோதமாகக் குப்பை கொட்டும் பிரச்சனைக்கு தீர்வு காண, தொழிற்சாலை கழிவுகளை நிர்வகிக்க, கேடிஇபிடபிள்யூஎமை நியமிக்க மாநில நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

மாநிலத்தின் துணை நிறுவனமான கேடி இபி கழிவு மேலாண்மை, கழிவுகளை அகற்ற சரியான நடைமுறைகளைக் கொண்டுள்ளது மற்றும் அதன் மூலம் நீண்டகாலமாக மாநிலத்தை பாதித்து வரும் பிரச்சனைகளை தீர்க்க முடியும் என்று நம்புவதாக உள்ளூர் அரசாங்கத்தின் பொறுப்பு ஆட்சிக்குழு உறுப்பினர் கூறுகிறார்.

சட்டவிரோத கழிவு " ஒரு பெரிய சவால். எனவே, சிலாங்கூரில் உள்ள தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யும் குப்பைகள் மீது சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனம் செலுத்துவார்கள் என்று நம்புகிறோம்" என்று இங் ஸீ ஹான் கூறினார்.

தற்போது தொழிற்சாலைகளால் நியமிக்கப்படும் ஒப்பந்ததாரர்கள் ஏற்படுத்தும் சட்டவிரோத கழிவு சிக்கலை இன்னும் ஆக்ககரமாக கையாள, இந்த பரிந்துரை சிறப்பாக இருக்கும் என்பதில் கிள்ளான் நகராண்மை கழக தலைவர் நோ ரெய்னி ரோஸ்லானும் கருத்திணக்கம் கொண்டுள்ளார்.

"ஒப்பந்ததாரர் அறிவுறுத்தியபடி தொழிற்சாலை கழிவுகளை அகற்ற வில்லை என்றால், அதை கேடி இபி கழிவு மேலாண்மை மூலம் நிர்வகிக்குமாறு கோருவது ஒரு தீர்வாகும், ஏனெனில் கேடிஇபி சேவையாளர்கள் கழிவுகளை சரியான இடத்தில் அகற்றுவதை நாங்கள் அறிவோம்," என்று அவர் கூறினார்.

வணிக நிறுவனங்கள் அதன் உரிமத்தைப் புதுப்பிப்பதற்கு முன், கழிவு அகற்றுதல் முறையாக மேற்கொள்வது உறுதிப்படுத்த தனது தரப்பினர் தொடர்ந்து கண்காணித்து வரும் என்று அவர் தெரிவித்தார்.

# பொது சொத்துகளைப் பாதுகாக்க மக்களின் உதவி தேவை

ஷா ஆலம், பொது சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கும் பொறுப்பற்றத் தரப்பினரை அடையாளம் கண்டு அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுப்பதில் பொது மக்களின் உதவி தங்களுக்கு மிகவும் தேவைப்படுவதாக ஷா ஆலம் மாநகர் மன்ற உறுப்பினர் ராமு நடராஜன் கூறினார். தாமான்களில் குறிப்பாக அடுக்குமாடி குடியிருப்புகளில் உள்ள குப்பைத் தொட்டிகள், விளையாடு மைதானங்கள் போன்ற அடிப்படை வசதிகள் முறையாக பாதுகாக்கப்படுவதை உறுதி செய்யும் பொறுப்பு குடியிருப்பாளர்களுக்கும் உள்ளது என அவர் சொன்னார்.

அண்மையில் தாமான் ஸ்ரீ மூடா வெலன்சியா அடுக்குமாடி குடியிருப்பு பகுதியில் புதிதாக தருவிக்கப்பட்ட குப்பைத் தொட்டிகள் பொறுப்பற்ற நபர்களால் எரியூட்டப்பட்டும் சக்கரங்கள் உடைக்கப்பட்டும் சேதப்படுத்தப்பட்ட சம்பவத்தை சுட்டிக்காட்டிய அவர், இத்தகைய செயல் அரசாங்கத்திற்கு மட்டும் இழப்பு அல்ல பொது மக்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கு அரசாங்கம் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு இடையூறு ஏற்படுவதாக குறிப்பிட்டார்.

மாநிலத்தில் திடக்கழிவு மேலாண்மைக்கு பொறுப்பேற்றுள்ள கும்பலான் டாருள் ஏசான் நிறுவனம் கடந்த மார்ச் மாதம் தலா 900 வெள்ளி மதிப்புள்ள 24 குப்பைத் தொட்டிகளை இந்த குடியிருப்பு பகுதிக்கு வழங்கியிருந்தது.



எனினும், சிறிது நாட்களில் அவற்றில் இரு குப்பைத் தொட்டிகள் பொறுப்பற்ற நபர்களால் சேதப்படுத்தப்பட்டுள்ளன என அவர் வேதனையுடன் தெரிவித்தார்.

இவ்விவகாரத்தை தாம் கோத்தா கெமுனிங் சட்டமன்ற உறுப்பினரும் மாநில ஆட்சிக்குழு உறுப்பினருமான வீ.கணபதிராவ் கவனத்திற்கு கொண்டுச் சென்றுள்ளதாகவும், இத்தகைய சம்பவங்கள் மீண்டும் நிகழாதிருப்பதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைளை மேற்கொள்ளும்படி அவர் தமக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் ராமு சொன்னார்.

# அந்நிய நாட்டினருக்கு கடைகளை வாடகைக்கு விடுவோர் மீது கடும் நடவடிக்கை



**ஷா ஆலம்**, கிள்ளான், ஜாலான் மேரு, பெரிய மார்க்கெட்டில் வணிகம் செய்வோரும் லைசென்ஸ் வைத்திருப்போரும் உள்நாட்டினராக உள்ள வேளையில் அந்நிய நாட்டினர் வெறும் உதவியாளர்களாக மட்டுமே பணி புரிவது கிள்ளான் நகராண்மைக் கழகம் மேற்கொண்ட ஆய்வில் தெரிய வந்துள்ளது.

உள்நாட்டினர் மட்டுமே வர்த்தக லைசென்ஸ் பெறுவதற்கு விண்ணப்பம் செய்ய முடியும் என நிபந்தனை விதிக்கப்-பட்டுள்ள நிலையில் சந்தையில் அந்நிய நாட்டினரின் ஆதிக்கம் உள்ளதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளைத் தமது தரப்பு கடுமையாகக் கருதுவதாக நகராண்மைக் கழகத்தின் சந்தை மற்றும் அங்காடி வணிகப் பிரிவு இயக்குநர் அஸார் சம்சுடின் கூறினார்.

தங்களுக்கு வழங்கப்பட்ட கடைகளை அந்நிய நாட்டினருக்கு வாடகைக்கு விடும் தரப்பினரின் வர்த்தக லைசென்ஸ் ரத்து செய்யப்படும் என்பதோடு கடைக்கும் சீல் வைக்கப்படும் என அவர் எச்சரித்தார். இந்த மார்க்கெட்டில் அந்நிய நாட்டினர் வியாபாரம் செய்யாமலிருப்பதை உறுதி செய்ய சந்தை மற்றும் அங்காடி வணிகப் பிரிவு தொடர்ச்சியான சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் எனக் கூறிய அவர், அந்நிய நாட்டினருக்குக் கடைகளை வாடகைக்கு விடுவதன் மூலம் குறுக்கு வழியில் லாபம் சம்பாதிக்க முயலும் தரப்பினருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

### பண்டார் புத்ரா

# மகா மாரியம்மன் ஆலயம்



## அறிவுக் களஞ்சியம், ஆன்மிக மையம்

**கிள்ளான்,** நமது நாட்டில் உள்ள ஆலயங்கள் வெறும் வழிபாட்டுத் தலங்களாக மட்டுமின்றி சமூக மையங்களாகவும் செயல்பட வேண்டும் என்பது காலத்தின் கட்டாயம். சிறுபான்மை இனமாகிவிட்ட நமக்கு அரசாங்கத்தின் உதவிகள் எட்டாக் கனியாகி வருவதால் சமூக, கல்வி மற்றும் பொருளாதாரத்தில் நமக்கு நாம் உதவிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளோம்.

இந்த உண்மையை பல சமூக, சமய அமைப்புகள் உணர ஆரம்பித்து விட்டன. குறிப்பாக ஆலயங்கள் பூஜை, புனஸ்காரங்கள் தாண்டி அறிவுக் கண்களைத் திறக்கும் ஆசான்களாகவும் துன்பத்தில் இருப்போருக்கு துயர் தீர்க்கும் ஆபத்தாண்டவர்களாகவும் மாறி வருகின்றன.

சில ஆண்டுகளுக்கு முன்னர் உலகை உலுக்கிய கோவிட்-19 பெருந்தொற்று, நாட்டை உலுக்கிய வெள்ளம் போன்ற பேரிடர்களின் போது எண்ணற்ற ஆலயங்கள் வழங்கிய எல்லையில்லா உதவிகளை யாரும் எளிதில் மறந்து விட முடியாது.

அந்த வகையில் வழிபாடு என்ற எல்லைக்குள் மட்டும் தங்களை வரையறுத்துக் கொள்ளாமல் எதிர்காலக் செல்வங்களுக்கு கல்விக் கண் திறக்கும் அற்புதத் திட்டத்தை முன்னெடுத்துள்ளது கிள்ளான், பண்டார் புத்ரா தேவி மகா மாரியம்மன் ஆலயம்.

இந்த ஆலயத்தின் வரலாறு, நிலையான இடம் பெறுவதில் ஏற்பட்ட இடர்பாடுகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து நம்மிடம் விரிவாக விவரிக்கிறார் ஆலயத்தின் தலைவர் டி.நாகராஜன்.

கிள்ளான்-பந்திங் சாலையில் அமைந்திருந்த அன்னாசி தோட்டம் (பைனாப்பிள் தோட்டம்) இந்த தேவி மகா மாரியம்மன் ஆலயத்தின் பூர்வீகம். 1958ஆம் ஆண்டு காளிமுத்து என்பவரின் முயற்சியால் உருவான இந்த ஆலயம் 1981ஆம் ஆண்டு செல்வம் என்பவரின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது. செல்வம் தலைமையிலான குழுவினர் சிறியதாக இருந்த ஆலயத்தை பெரிதாக விரிவுபடுத்தி தோட்ட மக்களின் பிரதான வழிபாட்டுத் தலமாக மாற்றினர்.

2001 ஆம் பைனாப்பிள் தோட்டம் மேம்பாட்டுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. தோட்டத்தில் குடியிருந்த மக்களும் வெளியேற்றப்பட்டனர். இந்த வெளியேற்ற நடவடிக்கையில் ஆலயமும் விடுபடவில்லை ஆலயத்தை தோட்ட நிலத்திலிருந்து அப்புறப் படுத்தும்படி ஆலய நிர்வாகத்தை மேம்பாட்டு நிறுவனம் நிர்ப்பந்தித்தது.

ஆலயத்தைக் காப்பாற்றுவதற்காக அரசியல் மற்றும் சமூகத் தலைவர்கள் போராட்டம் நடத்தினர். ஆலயத்தை அகற்ற முயன்ற நயவஞ்சகர்களால் ஆலயம் தீயிடப்பட்டது. தீயினால் சேதமடைந்த ஆலயம் நல்லுள்ளங்களின் உதவியுடன் மறுசீரமைப்பு செய்யப்பட்டது.

ஆலயத்தை அகற்ற மேம்பாட்டு நிறுவனம் ஆலயத்தை காப்பாற்ற ஆலய நிர்வாகமும் தொடர்ந்து போராட்டம் நடத்தி வந்தது. இரு தரப்புக்கும் இடையே தொடர்ச்சியாக நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் பலனாக பல இடங்கள் ஆலயத்திற்கான மாற்று இடங்கள் அடையாளம் காட்டப் பட்டன, எனினும், ஆலயத்திற்கு பொருத்-தமற்றவை என்ற காரணத்தால் அந்த நிலங்களை நிர்வாகத்தினர் நிராகரித்து விட்டனர்.

இதற்கிடையே கடந்த 2005ஆம் ஆண்டு பைனாப்பிள் தோட்டம் பண்டார் புத்ராவாக உருவாக்கம் கண்டது. ஷபாஸ் நீர் சேகரிப்பு கோபுரத்திற்கு அருகே வழங்கப்பட்ட அந்த நிலத்தை 2006ஆம் ஆண்டு நிர்வாகத்தினர் ஏற்றுக் கொண்டனர் என நாகராஜன் ஆலய வரலாற்றை விவரித்தார்.

வட்டார இந்துக்களின் உதவியுடன் புதிய இடத்தில் 2008ஆம் ஆண்டு ஆலயம் நிர்மாணிக்கப்பட்டு திருவிழா கொண்டாடப்பட்ட வேளையில் 2011ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து சிற்பிகள் வரவழைக்கப்பட்டு புதிய ஆலயம் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது என்றார் அவர்.

பண்டார் புத்ரா, ஜாலான் கெபுன் நெனாசில் சுமார் 15,000 சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ள இந்த ஆலய நிலத்திற்கு மாநில அரசின் முழு அங்கீகாரம் கடந்த மார்ச் மாதம் கிடைத்ததாக அவர் மேலும் சொன்னார்.

இந்த ஆலயத்தை வெறும் வழிபாட்டுத் தலமாக மட்டும் அல்லாமல் சமூக மையமாகவும் உருவாக்க விரும்புகிறோம், இந்த நோக்கத்தின் அடிப்படையில் சுமார் 25 லட்சம் வெள்ளி செலவில் இந்த ஆலயத்தில் இரு மேம்பாட்டு திட்டங்களை அமல்படுத்த விருக்கிறோம்.

சுமார் 15 லட்சம் வெள்ளி ஆலய நிர்மாணிப்புக்கு பயன்படுத்தப்படவுள்ள வேளையில் எஞ்சிய 10 லட்சம் வெள்ளியில் இரண்டு மாடிகள் கொண்ட கல்வி மற்றும் கலை கலாசார மையத்தை உருவாக்க விருக்கிறோம்.

இரண்டு வகுப்பறைகள் கொண்ட இந்த கட்டிடத்தில் முற்றிலும் இலக்கவியல் முறையில் பாடங்களை கற்கும் வசதி ஏற்படுத்தப்படும். காலையில் 4 முதல் 6 வயது வரையான சிறார்களுக்கு பாலர் பள்ளியாகவும் மாலையில் பிரத்தியேக வகுப்புகள், சமய வகுப்புகள் நடத்தும் மையமாகவும் இது செயல்படும் என நாகராஜன் விவரித்தார்.

இந்த ஆலயத்தின் நிர்மாணிப்புப் பணிகள் வரும் 2025 ஆம் ஆண்டு முற்றுப் பெற்றவுடன் பண்டார் புத்ரா, தாமான் செந்தோசா பெர்டானா, தாமான் செந்தோசா புத்ரி, டைனஸ்டி உலுபாலாங், பண்டார் புத்திரி இக்கோ வோர்ல்ட் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த சுமார் 25,000 இந்துக்களுக்கு இந்த ஆலயம் பிரதான வழிபாட்டு தலமாகவும் சமூக சேவை மையமாகவும் திகழும் என அவர் குறிப்பிட்டார்.

கடந்த 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தின் போது நல்லுள்ளங்கள் மூலம் பெறப்பட்ட சுமார் 80,000 வெள்ளி செலவிலான உதவிப் பொருட்கள் பந்திங், டத்தோ என்.எஸ். மணியம் குடியிருப்பு பகுதியில் வசிப்போருக்கு விநியோகம் செய்தோம்.

அதேபோல் கோவிட்-19 பெருந்தொற்று சமயத்தில் கிட்டத்தட்ட 40 நாட்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களை சுற்றுவட்டார பொதுமக்களுக்கு வழங்கினோம் என அவர் குறிப்பிட்டார்.

இந்த ஆலயத்தில் வளர்ச்சிக்கு மாநில மற்றும் மத்திய அரசுகள் தொடர்ந்து ஆதரவு வழங்கி வருவதாக கூறிய நாகராஜன், சிலாங்கூர் மாநில அரசிடம் இருந்து கடந்த ஈராண்டுகளாக தலா பத்தாயிரம் வெள்ளியை மானியமாக தாங்கள் பெற்றுள்ளதாக குறிப்பிட்டார்.

**செய்தி : ரா. ராஜா**


**SELANGOR INDRU**

Sidang pengarang

**PENASIHAT**

Lembaga Editorial MSSB

**PENGARANG KUMPULAN**

Fathi Aris Omar

**KETUA PENGARANG**

A.Pakiyanathan

**PENOLONG PENGARANG**

Rajah Ramaya

**ARTIS GRAFIK**

Kathiravan Manoharan

**JURUGAMBAR**

Asri Sapfie,
Raheemie Arifiri,
Hafiz Othman & Fikri Yusof

**Aras 11, Menara Bank Rakat, No1 Jalan Indah 14/8, Seksyen 14, 4000 Shah Alam.**

*Tel: 03-5523 4856*
*Faks: 03-5523 5856*
*Email: info@mediaselangor.com*



# மிட்லெண்ட்ஸ் தோட்டத் தமிழ்ப் பள்ளிக்கு ரிம. 100,000 எம்.ஆர்.சி.பி வழங்கியது

**கிள்ளான்,** சிலாங்கூர் மாநிலத்தில் புகழ் பெற்ற தமிழ்ப் பள்ளிகளில் ஒன்றான மிட்லெண்ட்ஸ் தோட்டத் தமிழ்ப் பள்ளிக்கு எம்.ஆர்.சி.பி கட்டுமான நிறுவனம் (ரி.ம. 100,000.00 ) ஒரு லட்சம் ரிங்கிட உதவித் தொகையுடன் பள்ளி மாணவர்களுக்கு புத்தகப் பை மற்றும் உதவிப் பொருட்கள் வழங்கியது.

இந்நிகழ்ச்சிக்கு ஷா ஆலம் கோத்தா அங்கெரிக் சட்டமன்ற உறுப்பினர் துவான் நஜ்வான் ஹலிமி தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சியில் அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் திருமதி. தேவமணி, பள்ளி வாரியத் தலைவர் உதயசூரியன், பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் முனியாண்டி இளங்கோவன், எம்.ஆர்.சி.பி நிறுவனத்தின் நடவடிக்கை தலைவர் துவான் பரமசிவம் அருணாசலம், எம்.ஆர்.சி.பி நிறுவன அதிகாரிகள், எம்.ஆர்.சி.பி.யின் அறவாரிய அதிகாரிகள், வாரிய உறுப்பினர்கள், பெற்றோர் ஆசிரியர் சங்கப் பொறுப்பாளர்கள், மிட்லெண்ட்ஸ் தோட்ட ஆலயத் தலைவர் மோகன்ராஜ், அரசியல் கட்சி தலைவர்கள், மாணவர்கள் மற்றும் பள்ளி ஆசிரியர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இந்தச் சிறப்பு நிகழ்ச்சிக்கு வருகை தந்து பள்ளியின் தலைமை ஆசிரியர் தேவமணி, வாரியத் தலைவர் உதயசூரியன், பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் இளங்கோவன் முனியாண்டி ஆகியோர் காசோலை மாதிரியை பெற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் உரை நிகழ்திய வாரியத் தலைவர் உதயசூரியன், இந்த உதவித்தொகை முற்றிலும் மாணவர்கள் நலனுக்காக மட்டுமே பயன்படுத்தப்படும். பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் அங்கீகாரத்துடன் இந்நிதி முறையாகப் பயன் படுத்த படும் என்று பள்ளியின் வாரியத் தலைவர் உதயசூரியன் வரவேற்புரை ஆற்றுகையில் கூறினார்.

## பள்ளி இடையூறுகளை தீர்க்க உதவிய சட்டமன்ற உறுப்பினர்



பள்ளியையோட்டி எல்.ஆர்.டி 3 ன் கட்டுமானப் பணிகள் கடந்த சில ஆண்டுகளாக நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தக் கட்டுமானப் பணிகள் பள்ளிக்குப் பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளன. இதனால் பல முறை விவாதங்கள் , பேச்சு வார்த்தைகள் நடை பெற்றுள்ளன. இரு தரப்பு கிடையே நடுவராக இருந்து இப்பிரச்சனைகள் முறையாகத் தீர்வு கண்டுள்ளார் இத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் துவான் நஜ்வான் ஹலிமி. என்றார் அவர்.



## மாணவர் தங்கும் விடுதிக்கு ரி.ம. மூன்று லட்சம் தேவை

மேலும் பேசிய அவர், சிலாங்கூர் மாநிலத்தில் உள்ள வசதி குறைந்த ( B 40 ) பிரிவை சேர்ந்த மாணவர்கள் தங்கி கல்வி கற்கச் சிலாங்கூர் மாநில அரசு ஆதரவுடன் மாணவர் விடுதி கட்டப்பட்டுள்ளது. இவ்விடுதி சிறப்பாகச் செயல்பட முதல் கட்டமாக ரி.ம. 300,000.00 தேவைப்படுகிறது.

இத்தொகையை கொடுப்பதாக மாநில அரசு வாக்குறுதி வழங்கியுள்ளது என்று அப்பள்ளியின் வாரியத் தலைவர் உதயசூரியன் தெரிவித்தார்.

## ரூமா பஞ்சாங் போல் இருந்த தமிழ்ப்பள்ளி

கடந்த காலங்களில் நாட்டில் உள்ள தமிழ்ப் பள்ளிகள் பல்வேறு சவால்களை எதிர்நோக்கின. மிட்லெண்ட்ஸ் தோட்டத் தமிழ்ப் பள்ளியும் அதில் சிக்கித் தவித்தது. இரண்டு தொடர் வீடுகள் ( ரூமா பஞ்சாங் ) போல் இருந்த அன்றைய பள்ளி கட்டிடம், சிலாங்கூரில் அரசியல் மாற்றத்திற்கு பிறகு பல்வேறு வசதிகள் கொண்ட பள்ளியாக உருமாறியுள்ளது. இதற்கு மாநில அரசுக்கு நன்றி.

## குண்டர் கும்பல் கலாச்சாரத்தை அழிக்கும்

இருப்பினும் நாட்டில் நிலவிய மத்திய மாநில அரசு வேற்றுமையால் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்க நேரிட்டது. தற்போது மத்தியிலும் மாநிலத்திலும் ஒரே கட்சி ஆட்சியில் இருப்பதால் பள்ளிக்கு நிலவி வந்த இன்னல் நீங்கியுள்ளது. இதனை நாம் தொடர்ந்து தற்காத்துக் கொள்ள வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார்.

200 வசதி குறைந்த இந்திய மாணவர் தங்கி படிக்க கூடிய மாணவர் விடுதி உள்ளது. ஆரம்பத்தில் 25 மாணவர்களுடன் தொடங்கும் இவ்விடுதி இவ்வாண்டு இறுதிக்குள் கட்டம் கட்டமாக மாணவர்களை அதிகரிப்பதும் 100 மாணவர்கள் வரை இவ் விடுதியில் தங்க வைப்பது இலக்காகும்.

நமது மாணவர்களுக்கு முறையான கற்றல் கற்பித்தலை கொடுத்தால் இந்தியச் சமுதாயம் எதிர்நோக்கியுள்ள குண்டர் கும்பல் பிரச்சனைகளை எதிர் காலத்தில் நாம் கலைய முடியும் என்றார்.

## சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கலாம்

இதே போன்று தான் சமீபத்தில் நடைபெற்று முடிந்த சீ விளையாட்டு போட்டியில் பதக்கம் பெற்ற நிலையும். நாட்டில் உள்ள ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கு முறையான பயிற்சி அளித்தால் மகத்தான சாதனை படைக்கக் கூடிய ஆற்றலை நம் நாட்டு மாணவர்கள் பெறுவர் என்றார் அவர்.

**செய்தி : சு. சுப்பையா**

# ஊழல்களில் தொடர்புடையவர்களுக்கு எதிராக விசாரணை

**கோலாலம்பூர்**, ஊழல் நடவடிக்கைகள் காரணமாக நாட்டிற்கு இழப்பு ஏற்படக் காரணமாக இருந்தவர்களுக்கு எதிராக விசாரணை மேற்கொள்ளும்படி அமலாக்கத் தரப்பினருக்கு குறிப்பாக மலேசிய ஊழல் தடுப்பு ஆணையத்திற்கு பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் உத்தரவிட்டுள்ளார்.

சட்ட அம்சங்களுக்கு உட்பட்டு அனைத்து விதமான நடவடிக்கைகளையும் எடுக்கும்படி எஸ்.பி.ஆர்.எம். தவிர்த்து மலேசிய வருமான வரி வாரியம், பேங்க் நெகாரா, அரச மலேசிய போலீஸ் படையின் வர்த்தக குற்றப் புலனாய்வுத் துறை உள்ளிட்ட துறைகளுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளதாக அன்வார் சொன்னார்.

நான் ஊழலுக்கு எதிராக குரல் கொடுக்க முடியும். ஆனால் பொதுவான உத்தரவை வழங்க முடியுமே தவிர ஒவ்வொன்றாக விளக்கிக் கொண்டிருக்க முடியாது. ஒரு சிலர் கோடிக்கணக்கில் கொள்ளையடித்து விட்டு பல ஆண்டுகளாக பாதுகாப்பாக இருக்கின்றனர். யாராலும் அவர்களைத் தொட முடியவில்லை என்ற அன்வார் குறிப்பிட்டார்.

நாட்டிற்கும் சட்டத் திட்டங்களுக்கு அர்த்தமே இல்லாமல் போய்விட்டது. போலீஸ் மற்றும் உள்நாட்டு வருமான வரி வாரியத்திற்கு நாம் உத்தரவிட்டால் கீழே உள்ளவர்கள் சிக்குகிறார்கள். மேலே உள்ள கும்பல்கள் கோடிக் கணக்கான பணத்துடன் தப்பி விடுகின்றன. அதனால்தான் இந்த உத்தரவை நான் பிறப்பித்துள்ளேன். அரசியல் சித்தாந்தம் மற்றும் இன வேறுபாடின்றி அனைவரும் எனது இந்த நடவடிக்கையை வரவேற்பார்கள் என எதிர்பார்க்கிறேன் என்றார் அவர். இன்று இங்குள்ள டத்தாரான் மெர்டேக்காவில் மலேசியா மடாணி நோன்புப் பெருநாள் பொது உபசரிப்பில் கலந்து கொண்டப் பின்னர் செய்தியாளர்களிம் அவர் இதனைத் தெரிவித்தார்.

# மின் கட்டண இலக்கு மானியம்
## இவ்வாண்டு இறுதியில் அறிவிக்கப்படும்

**ஷா ஆலம்,** மின் கட்டண மானிய இலக்கு செயல்படுத்துவதற்கான புதிய சமச்சீரற்ற செலவு நிவாரணத்தின் (ICPT) முதன்மை தரவுத் தளம் (PADU) ஆய்வு முடிவு அடைந்த பிறகு ஆண்டின் இறுதியில் அறிவிக்கப்படும்.

ஜூலை 1 முதல் டிசம்பர் 31 வரை தீபகற்பத்தில் மின்சாரம் பயன்படுத்துபவர்களுக்கு கூடுதல் கட்டண நிவாரணத்திற்கான எண்ணத்தை அமைச்சகம் இன்னும் ஆராய்ந்து வருவதாக இயற்கை வளங்கள், சுற்றுச்சூழல் மற்றும் வானிலை மாற்றம் அமைச்சர் நிக் நஸ்மி நிக் அஹ்மட் தெரிவித்தார்.

"இது அரசாங்கத்தின் தற்போதைய கவனத்திற்கு ஏற்ப உள்ளது, இதனால் மானியங்கள் உள்நாட்டு பயனர்களுக்குக் குறிப்பாக அதிக விகிதத்தில் மின்சாரத்தைப் பயன்படுத்துபவர்களுக்கு ஒரு குடியிருப்புக்கான மின்சார நுகர்வு அளவை அடிப்படையாகக் கொண்ட இலக்கு முறையில் செயல்படுத்தப் படுகின்றன. "உயர் மற்றும் நடுத்தர மின்சார பயனர்கள் அல்லது T20க்கான மானியத்தை நிறுத்தும் போதுதான் அந்த நோக்கத்தை எங்களால் அடைய முடியும்.

"அடுத்த ஐசிபிடி கான முடிவு எதிர்காலத்தில் அமைச்சரவை மட்டத்தில் முன்வைக்கப்பட்டு ஒப்புதலுக்குப் பிறகு முடிவு எடுக்கப்படும்," என்று அவர் நாடாளுமன்றத்தில் கேள்வி பதில் அமர்வின் போது கூறினார்.

மின்சார மானியங்களை பகுத்தாய்வு செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ள நடவடிக்கைகளை அறிய விரும்பிய கோத்தா மலாக்கா நாடாளுமன்ற உறுப்பினர் கூ போய் தியோங்கின் கேள்விக்கு அவர் பதிலளித்தார். ஜனவரி 1 முதல் ஜூன் 30 வரையிலான காலத்திற்கு RM10.76 பில்லியன் மின்சார கட்டண மானியங்களை ஈடுகட்ட அரசாங்கம் உறுதியளித்துள்ளதாக நிக் நஸ்மி கூறினார்.

"இது தீபகற்ப மலேசியாவில் உள்ள மொத்த நுகர்வோர்களில் 99 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மொத்தம் 9.5 மில்லியன் மின்சார நுகர்வோர் மின்சார உற்பத்திக்கான எரிபொருளின் விலை அதிகரிப்பால் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்வதாகும்.



# சமையல் எண்ணெய் விலையை நிர்ணய திட்டம் RM1.6 பில்லியன் ஒதுகிடு

**ஷா ஆலம்**, சமையல் எண்ணெய் விலையை நிர்ணயம் செய்யும் திட்டத்தை (COSS) செயல்படுத்த அரசாங்கம் இந்த ஆண்டு தோராயமாக RM1.6 பில்லியன் ஒதுக்க வேண்டும்.

மானிய விலையில் சமையல் எண்ணெய் வழங்க ஒதுக்கப்படும் தொகையானது கச்சா பாம் ஒயில் நிர்ணயிக்கப்பட்ட விலை இயக்கத்திற்கு உட்படும் என்றார் உள்நாட்டு வர்த்தகம் மற்றும் வாழ்க்கைச் செலவுக்கான துணை அமைச்சர் பௌசியா சலே (KPDN).

"சிஇஓ வின் விலை அதிகரித்தால், திட்டத்தைச் செயல்படுத்த தேவையான நிதியும் அதிகரிக்கும். "இவ்வாறு 2022 இல் செயல்படுத்த புதுப்பிக்கப்பட்ட ஒதுக்கீடு RM2.42 பில்லியன் மற்றும் 2023 க்கு தேவையான மொத்த ஒதுக்கீடு RM1.6 பில்லியனாக மதிப்பிடப்படுகிறது. இது கச்சா எண்ணெய் விலைகளின் ஏற்ற இறக்கத்திற்கு உட்பட்டது.

"COSS ஐ செயல்படுத்த பட்ஜெட் மூலம் அறிவிக்கப்பட்ட ஒதுக்கீடு அல்லது நிதியின் அளவு 2022க்கு RM400 மில்லியன் மற்றும் இந்த ஆண்டு RM500 மில்லியன்," என்று அவர் இன்று நாடாளுமன்றத்தில் ஒரு கேள்வி பதில் அமர்வின் போது கூறினார்.

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் அங்கீகரிக்கப்பட்ட சமையல் எண்ணெய் மானியங்கள் ஒதுக்கீடு பற்றி தெரிந்து கொள்ள விரும்பிய கெப்போங் நாடாளுமன்ற உறுப்பினர் லிம் லிப் இங் கின் கேள்விக்கு அவர் பதிலளித்தார்.

பௌசியா மானிய விலையில் சமையல் எண்ணெய் பாக்கெட்டுகளை வழங்கும் நோக்கத்தில் KPDN நாடு முழுவதும் 366 பேக்கேஜிங் நிறுவனங்களை சந்தையில் மானிய விலையில் சமையல் எண்ணெய் வழங்க நியமித்துள்ளது.

# இளைஞர்கள் வாசிப்பு கலாச்சாரத்தைத் தொடர்ந்து வளர்க்க பிரதமர் வலியுறுத்து

**கோலாலம்பூர்,** நாட்டின் தலைமைப் பதவிக்கு வாரிசாக இருக்கும் இளம் தலைமுறையினர் தங்களுக்கும் சமூகத்திற்கும் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு கொள்கைகள் மற்றும் இலட்சியங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்று பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் விரும்புகிறார்.

இந்த நாட்டில் எந்த வகையான கொடுங்கோன்மை மற்றும் அடக்கு-முறையை நிராகரிக்கும் அதே வேளையில் இளைஞர்களுக்கு உண்மை மற்றும் நீதியின் பொருளைக் கண்டறிய இலட்சியவாதம் உதவும் என்று அவர் கூறினார்.

"இப்போது நான் பொறுப்பு பெற்றுள்ளதால், இளைஞர்கள் சிந்திக்கவும், அறிவை வளர்க்கவும், பிரச்சினைகளை நன்கு சீர்தூக்கி பார்த்தல், தீமை, கொடுங்கோன்மை, அடக்குமுறை மற்றும் மோசடி எது என்பதை அறிய கூடிய விவேக தலைமுறையாக அவர்களை மாற்ற விரும்புகிறேன். லங்காவி தொழிற்கல்லூரியில் பிரதமருடனான உரையாடல் நிகழ்ச்சியில் அவர் இவ்வாறு கூறினார்.

எந்தவொரு பிரச்னையிலும் சிறந்த தீர்ப்புகள் வழங்கவும், நீதியை நிலைநாட்டவும் அறிவு திறன் உதவும் என்பதால், வாசிப்பு கலாச்சாரத்தைக் கைவிட வேண்டாம் என்றும் அன்வார் இளைஞர்களுக்கு நினைவூட்டினார்.

சமூக ஊடகங்களை அதிகம் விரும்பும் இன்றைய இளைஞர்களின் அணுகுமுறையை பற்றி கேட்டதற்கு அதை நல்ல நோக்கங்-களுக்காகப் பயன்படுத்த-ப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்றார்.

இ-துனாய் பெலியா ரஹ்மா (இளைஞர் மின் பண உதவி) உதவி குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், இந்த ஜூன் மாதம் தொடங்கி அது விநியோகி-க்கப்படும் என்று பிரதமர் கூறினார்.

இ-துனாய் பெலியா என்னும் (மின்-பண) ரஹ்மா RM200 திட்டம், 18 முதல் 20 வயதுடைய இளைஞர்களுக்கு உதவுவதற்காக RM400 மில்லியன் ஒதுக்கீட்டில் 2023 பட்ஜெட்டில் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட ஒரு திட்டமாகும்.

# ஊழியர் சேமநிதி வாரியம்

## அங்காடிகளை விற்றதன் மூலம் RM46 மில்லியன் லாபம்





**கோலாலம்பூர்,** ஊழியர் சேமநிதி வாரியம் (EPF) கிள்ளான் பள்ளத்தாக்கு மற்றும் ஜொகூரில் உள்ள ஆறு பல்பொருள் அங்காடிகளை விற்றதன் மூலம் RM46 மில்லியன் லாபம் ஈட்ட முடிந்தது. கிளானா ஜெயா வில் உள்ள மற்றொரு பல்பொருள் அங்காடி அரசாங்கத்துடன் இணைக்கப்பட்ட நிறுவனத்திற்கு (ஜிஎல்சி) விற்க ஊழியர் சேமநிதி வாரியம் திட்டமிட்டுள்ளதாகத் துணை நிதியமைச்சர் டத்தோஸ்ரீ அஹ்மட் மஸ்லான் மேலும் கூறினார்.

பண்டார் கின்றாரா ஜெயண்ட் கட்டிடம், புத்ரா ஹைட்ஸ் ஜெயண்ட் கட்டிடம், யுஎஸ்ஜே ஜெயண்ட் கட்டிடம், கிள்ளான் ஜெயண்ட் கட்டிடம், உலு கிள்ளான் ஜெயண்ட் கட்டிடம் மற்றும் ஜொகூரில் உள்ள பிளென்தோங் ஜெயண்ட் கட்டிடம் ஆகியற்றை விற்றதன் மூலம் ஊழியர் சேமநிதி வாரியம் 46 மில்லியன் ரிங்கிட் லாபத்தை ஈட்டியது.

கிள்ளான் பள்ளத்தாக்கு மற்றும் ஜோகூரில் உள்ள ஆறு சொத்துகளின் போர்ட்ஃபோலியோவை விற்றதன் மூலம் பெறப்பட்ட தொகை மற்றும் ஊழியர் சேமநிதி வாரியம் மற்றொரு பல்பொருள் அங்காடியை விற்க எண்ணம் கொண்டுள்ளதா என்பதையும் அறிய விரும்பிய டத்தோஸ்ரீ இக்மால் ஹிஷாம் அப்துல் அஜிஸின் கூடுதல் கேள்விக்கு அவர் பதிலளித்தார்.

"இதில் தலைமையகம் மற்றும் மாநிலத்தில் உள்ள ஊழியர் சேமநிதி வாரிய கட்டிடங்கள் உட்பட நாட்டில் மொத்த முதலீடு RM11 பில்லியன் ஆகும் மற்றும் வெளிநாடுகளில் அதன் சொத்துக்களின் மதிப்பு RM30 பில்லியனாக உள்ளது. "இதுவரை இந்த முதலீடுகள் அனைத்தையும் நாங்கள் கவனித்து வருகிறோம்," என்று ஜிம்மி புவா வீசூ எழுப்பிய கூடுதல் கேள்விக்கு அவர் பதிலளித்தார், அவர் உள்நாட்டு சந்தையில் ஊழியர் சேமநிதி வாரிய முதலீடுகளின் சதவீதத்தை பற்றி அறிய விரும்பினார்.

# 5ஜி அலைக்கற்றை அடைவு நிலை 59.5 விழுக்காட்டை எட்டியது



**கூச்சிங்,** மலேசியாவில் 5ஜி அலைக்கற்றை சேவையின் அடைவு நிலை கடந்த ஏப்ரல் மாதம் இறுதி வரை 59.5 விழுக்காட்டை எட்டியுள்ளதாக தொடர்பு மற்றும் இலக்கவியல் துறை அமைச்சர் ஃபாஹ்மி ஃபாட்சில் கூறினார்.

அதே சமயம் சரவா மாநிலத்தில் இந்த அலைக் கற்றையின் அடைவு நிலை 34 விழுக்காடாக உள்ளது என்று அவர் சொன்னார்.

சரவா மாநிலத்தைப் பொறு-த்தவரை இந்த அடைவு நிலை போதுமானதாக இல்லை என்று நான் கருதுகிறேன்.

ஆகவே, 5ஜி அலைக்கற்றை தேவைப்படும் இடங்களை பட்டியலிடும் அதேவேளையில் மலேசிய தொடர்பு மற்றும் பல்லுடக ஆணையத்துடன் ஒருங்கிணைந்து செயல்படும்படி அம்மாநில அரசைக் கேட்டுக் கொள்கிறேன் என அவர் தெரிவித்தார்.

மாநில அரசு விரும்பும் இடங்களில் 5ஜி சேவையை விரைந்து வழங்குவதற்கு இந்த ஒருங்கிணைப்பு அவசியமாகிறது என்று நேற்று இங்கு நடைபெற்ற 2023 ஆம் ஆண்டு அனைத்துலக தொலைத்தொடர்பு மற்றும் தகவலறிந்த சமூக தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இவ்வாண்டு இறுதிக்குள் அடர்த்தியான மக்கள் தொகை கொண்ட 80 விழுக்காடு பகுதிகளில் 5ஜி அலைக்கற்றை சேவையை வழங்க அரசாங்கம் இலக்கு நிர்ணயித்துள்ளதாக அமைச்சர் முன்னதாக கூறியிருந்தார்



# மீன்களின் விலை இன்னும் கட்டுக்குள் உள்ளது

**கோம்பாக்,** தற்போது நாட்டில் நிலவும் வெப்பமான காலநிலை காரணமாக மீன்களின் விலை அதிகரித்துள்ளதாக கூறப்படுவதை உள்நாட்டு வர்த்தகம் மற்றும் வாழ்க்கைச் செலவு அமைச்சகம் (KPDN) கண்காணிக்கும். இதுவரை கடல் உணவுகளின் விலை கட்டுக்குள் இருப்பதாகவும், இன்னும் நெருக்கடி குறித்து புகார்கள் ஏதுமில்லை என்று அதன் அமைச்சர் டத்தோஸ்ரீ சலாவுடின் அயூப் கூறினார்.

"மீன்கள் விநியோகம் இன்னும் போதுமானதாக உள்ளது. உள்நாட்டு வர்த்தகம் மற்றும் வாழ்க்கைச் செலவு அமைச்சகத்தின் அமலாக்க அதிகாரிகள் மற்றும் வேளாண்மை மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சகம் (MAFS) தொடர்ந்து நிலைமையைக் கண்காணித்து வருகிறது. முன்னதாக, விநியோக அளவில் மீன்கள் குறைவாக இருப்பதாகக் கூறியதால் ஒரு சில வியாபாரிகள் மீன்களின் விலையை உயர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்தன.

மீன் விலை குறித்த புகார்கள் குறித்து ஒட்டு மொத்த வியாபாரிகள், விநியோகிப்பாளர் களிடம் இருந்து மட்டுமல்லாமல் தனிப்பட்ட புகார்கள் வந்தாலும் அது குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க அந்த அமைச்சு தயாராக இருப்பதாக அமைச்சர் கூறினார்.

# சிலாங்கூர் அனைவருக்குமானது, இனவாதம் ஜெயிக்காது - மந்திரி புசார்

**கிள்ளான்**, அனைத்து சமூகத்தையும் ஒன்றிணைத்து ஒற்றுமையாக, முன்னேற்றகரமாக கடந்த 15 ஆண்டுகளாக நிர்வகித்து வருகிறோம். இங்கு நாட்டில் உள்ள எல்லா மாநிலத்தை சேர்ந்தவர்களும் பொருள் ஈட்டி செல்கின்றனர். அந்த அளவிற்கு பொருளாதார வலிமையுடன் திகழ்கிறது. எந்த சமூகமும் விடுபடாமல், ஓரங்கட்டப் படாமல் இருப்பதை நாம் உறுதி செய்துள்ளோம் என மந்திரி புசார் கூறினார்.

குறிப்பாக ஆண்டு தோறும் சிலாங்கூரில் உள்ள தமிழ்ப் பள்ளி, சீன பள்ளிகள் என்று எல்லாப் பள்ளிகளுக்கும் தடையின்றி மானியம் வழங்கி வருகிறோம். இதே போல் சிலாங்கூரில் உள்ள எல்லா மத வழிப்பாடு தளங்களுக்கும் மானியம் வழங்கி வருகிறோம். மத வேறுபாடு, இன வேறுபாடு காட்டாமல் ஒற்றுமையாக சிலாங்கூர் மாநிலத்தை நேர்மையாக வழி நடத்தி வருகிறோம். சிலாங்கூரில் முதல் தர குடிமக்கள் இரண்டாம் தர மக்கள் என்று வேறுபாடு காட்டப் படுவதில்லை. இங்கு அனைவரும் சமம். ஆனால் எதிர்க்கட்சிகள் இனத்துவேசத்துடன் எதிர் வரும் மாநில சட்டமன்ற தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடும், அதனை நாம் முறியடிக்க வேண்டும்.

கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் கல்விக் கடன் உதவியை விடாமல் செய்து வருகிறோம். சிலாங்கூரில் எல்லா பொருளாதார திட்டங்களும் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுகிறது. எல்லாத் திட்டங்ககளின் பயனும் மக்களுக்கு முறையாக சென்று அடைவதை மந்திரி புசார் முதல் அடிமட்ட நிலைத் தலைவர்களான கே.கே.ஐ. இந்திய சமுதாய தலைவர்கள், கிராமத் தலைவர்கள் வரை உறுதி செய்து வருகின்றனர்.

தற்போது சிலாங்கூர் மாநிலத்தை மாற்றப்போவதாக எதிர்க்கட்சிகள் விஷம பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறது. **எப்படி மாற்றப் போகிறார்கள் கெடாவை போன்ற அல்லது கிளாந்தான் மாநிலத்தை போன்றா** என அவர் கேள்வி எழுப்பினார்.

இப்படி பட்ட விஷமப் பிரச்சாரத்தை எதிர்க்கட்சிகள் மலாய்க்காரர்களிடம் செய்து வருவதாக அவர் பகிரங்கமாக குற்றம் சாட்டினார். கடந்த 15 வருடமாக நாம் ஆற்றி வரும் சேவையை தொடர்ந்து நிலைநாட்ட நாம் அனைவரும் ஒன்று பட்டு தீவிரமாக செயல் பட வேண்டிய தருணம் இது என்றார் மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி கேட்டுக் கொண்டார்.




# மலேசியாவுக்கு தங்கங்களை வென்ற - ஷாமளராணி, பிரேம் குமார்

**புனோம் பென் ,** இங்கு நடைபெற்று வரும் சீ போட்டியில் மலேசியாவுக்கு முதல் இரு தங்கப் பதக்கங்களைப் பெற்றுத் தந்ததன் மூலம் கராத்தே அணியினர் நாட்டின் பதக்க வேட்டையை தொடங்கி வைத்துள்ளனர்.

மலேசிய விளையாட்டு வீரர்களுக்கு உற்சாகம் அளிக்கும் வகையில் நாட்டின் முதல் தங்கத்தை நேற்று நடைபெற்ற ஐம்பது கிலோவுக்கும் கீழ்ப்பட்ட குமித்தே மகளிர் கராத்தே போட்டியில் நடப்பு வெற்றியாளரான சிஷாமளராணி நாட்டிற்கு பெற்றுத் தந்தார். இந்த போட்டியில் 2022ஆம் ஆண்டு உலக வெற்றியாளரான பிலிப்பைன்ஸ் நாட்டின் ஜூன்னா ட்ஸ்க்கி வில்லனுவாவை ஷாமளராணி வெற்றி கொண்டார். ஆட்டத்தின் தொடக்கத்தில் வில்லானுவா 1-0 என்ற புள்ளிக் கணக்கில் முன்னிலை இருந்தவரை ஷாமளராணி தனது அபார ஆட்டத்தின் வழி, புள்ளிக் கணக்கை 1-1 என சமநிலை படுத்தி, வெற்றியாரனார். மற்றொரு ஆட்டத்தில் 2019ஆம் ஆண்டு வெற்றியாளரான எஸ்.பிரேம்குமார், இடது மணிக்கட்டில் ஏற்பட்ட காயத்தால் உண்டான வலியையும் பொருட்படுத்தாமல் 55 கிலோவுக்கும் கீழ்ப்பட்ட குமித்தே ஆண்கள் பிரிவில் தாய்லாந்தின் சான்பெட் செட்டாபோங்கை 3-1 என்ற புள்ளிக் கணக்கில் வீழ்த்தி மேலும் ஒரு தங்கத்தை வென்றார்.

# சீ போட்டியில் சிலாங்கூர் 46 பதக்கங்களை வென்றது

**ஷா ஆலம்,** அண்மையில் கம்போடியாவில் நடந்து முடிந்த சீ போட்டியில் மலேசிய குழுவுக்கு 46 பதக்கங்களைப் பெற்றுத் தந்த சிலாங்கூர் மாநில விளையாட்டாளர்களுக்கு சிலாங்கூர் விளையாட்டு மன்றம் (எம்.எஸ்.என்.) வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டது.

இந்த அடைவு நிலையை சரி செய்து கொள்வதன் மூலம் வருங்காலங்களில் நிர்ணயிக்கப்பட்ட பதக்க இலக்கை அடைய முடியும் என்று எம்.எஸ்.என். நிர்வாக இயக்குநர் முகமது நிஸாம் மர்ஜூக்கி கூறினார்.

ஈராண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் இந்தப் போட்டியில் 6 தங்கம், 16 வெள்ளி மற்றும் 24 வெண்கலப்பதக்கங்களை சிலாங்கூர் விளையாட்டாளர்கள் பெற்றதாக அவர் சொன்னார்.

புதுமுகங்கள் உள்பட இந்த போட்டியில் பங்கேற்ற மாநில விளையாட்டாளர்களில் ஏறக்குறைய அனைவரும் பதக்கத்தைப் பெற்றுத் தந்துள்ளனர். புதியவர்கள் அடுத்த ஆண்டுகளில் நடைபெறும் போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவதற்குரிய வாய்ப்பு உள்ளது என அவர் குறிப்பிட்டார். பந்தெறியும் போட்டியில் சைபுல் பாஹ்ரி முசிம், கராத்தே போட்டியில் ஆர். ஷர்மேந்திரன், சி. ஷாமளராணி, சேகால்ப் போட்டியில் இங் ஜிங் ஷூவான் மற்றும் ஹாக்கி குழுவின் ஆறு ஆட்டக்காரர்கள் மூலம் சிலாங்கூர் ஆறு தங்கப்பதக்கங்களைப் பெற்றது.




கராத்தே போட்டியின் 75 கிலோக்கு கீழ்ப்பட்ட குமித்தே பிரிவில் நான்கு முறை தொடர்ச்சியாகத் தங்கம் வென்று ஷர்மேந்திரன் சாதனைப் புரிந்துள்ளதாக முகமது நிஸாம் தெரிவித்தார்.

# சீ விளையாட்டு போட்டியில் மேலும் ஒரு தங்கத்தை ஈட்டினார்




புனோம் பென், கம்போடியாவில் நடைபெற்று வரும் சீ விளையாட்டு போட்டியில் மலேசியாவுக்கு மேலும் ஒரு தங்கத்தை ஈட்டித் தந்தார் 400 மீட்டர் ஓட்ட வீராங்கனை ஷெரின் சேம்சன் வல்லபாய்.

தற்போது அமெரிக்காவில் ஓட்டப் பயிற்சி மேற்கொண்டுவரும் ஷெரின் சேம்சன் நாட்டுக்கு ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கி வந்தார். அமெரிக்காவில் பயிற்சியின் போது மலேசியாவின் மகளிர் 400 மீட்டர் ஓட்ட தேசிய சாதனையை முறியடித்த அவர் இவ்வாண்டு சீ விளையாட்டு போட்டியில் தங்கப் பதக்கத்தை வெல்வார் என்ற எதிர்பார்ப்பு மலேசியர்களிடம் அதிகம் இருந்தது.

இரண்டு வியட்னாமிய போட்டியாளர்களை வென்று மலேசியாவுக்கு தங்கம் வென்று தந்த அவர். நீண்ட தூர பயண களைப்பு ,மற்றும் மலேசியர்களின் குறிப்பாக தனது பெற்றோர்களின் எதிர்பார்ப்பும் தனக்கு மிகுந்த மன அழுத்தத்தை தந்ததாக குறிப்பிட்டுள்ளார். அவரின் தாய் மற்றும் தந்தை இருவரும் 80 ஆம் ஆண்டுகளில் நாட்டின் முன்னணி ஓட்டப்பந்தய நட்சத்திரங்கள். தந்தை செம்சன் வல்லபாய். 800 மீட்டர் ஓட்டப்பந்தய வீரராக இருந்த வேளையில் நாட்டை பிரதிநிதித்து பல சர்வதேசப் போட்டிகளில் பங்கொடுத்து, நாட்டிற்கு பதக்கங்களை வென்றுள்ளார், அவரின் தாயார் ஜோசப்பின் மேரி நாட்டின் முன்னணி 400 மீட்டர் ஓட்டப்பந்தய வீராங்கனையாக விளங்கியதுடன், சீ விளையாட்டு போட்டிகளில் 4 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# சீ போட்டி கராத்தே விளையாட்டாளர்களுக்கு கௌரவிப்பு

புத்ரா ஜெயா, கம்போடியாவில் அண்மையில் நடைபெற்ற சீ விளையாட்டு போட்டியில் மலேசியக் கராத்தே விளையாட்டாளர்கள் 4 தங்கம் 2 வெள்ளி மற்றம் 4 வெண்கலப் பதக்கங்களை வென்று நாட்டிற்குப் பெருமையை தேடித் தந்துள்ளனர். மேலும் மலேசிய ஆண்கள் கராத்தே குழுவில் இடம் பெற்ற கார்த்திக், ஷர்மேந்திரன், பிரேம் குமார், சூரிய சங்கர், முகமட் அரிப், குகன் மற்றும் கிரிஸ்வரன் ஆகியோர் வெள்ளிப் பதக்கம் வென்றனர். பெண்கள் குமிட்டே பிரிவில் மாதுரி மற்றும் ஆண்கள் குமிட்டே பிரிவில் முகமட் அரிப் ஆகியோர் வெண்கலப் பதக்கம் வென்றனர். கம்போடியா சீ போட்டியில் பதக்கங்களை வென்ற மலேசிய கராத்தே குழுவினர் இன்று மரியாதை நிமித்தமாக மனிதவள அமைச்சர் சிவகுமாரை நேரில் சந்தித்து வாழ்த்துகளைப் பெற்றனர்.

சீ போட்டியில் மலேசியாவுக்கு ஏழு தங்கம் பெற்றுத் தந்து சாதனை படைத்த டத்தோ பி. அறிவழகன், கராத்தே மாஸ்டர் பி.தியாகு, குழு நிர்வாகி சுகுமாரன், தலைமை பயிற்சியாளர் தாமிர், துணை பயிற்சியாளர்கள் புவனேஸ்வரன், செந்தில், குணசீலன் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

# சீ போட்டியில் தங்கம் வென்ற ஷாமளராணிக்கு மாநகர் மன்றம் கௌரவிப்பு



**ஷா ஆலம்,** கம்போடியாவின் புனோம் பென் நகரில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டு சீ போட்டியில் தங்கம் வென்ற கராத்தே வீராங்கனையான சி. ஷாமளாராணி ஷா ஆலம் மாநகர் மன்றத்தால் கௌரவிக்கப்பட்டார். இங்குள்ள தாமான் ஸ்ரீ மூடாவைச் சேர்ந்த ஷாமளாராணியை ஷா ஆலம் மாநகர் மன்றத்தின் இந்தியப் பிரதிநிதிகளான வீ.பாப்பா ராய்டு, ராமு நடராஜன், எம்.முருகையா மற்றும் எஸ்.காந்திமதி ஆகியோர் சந்தித்து வாழ்த்து தெரிவித்துக் கொண்டதோடு ஷா ஆலம் டத்தோ பண்டார் சார்பாக நினைவுச் சின்னத்தையும் வழங்கினர். மாநகர்மன்ற உறுப்பினரான ராமு தான் கல்வி கற்ற சுங்கை ரெங்கம் தமிழ்ப்பள்ளியின் முன்னாள் மாணவி என்பதாலும், தான் பொறுப்பேற்றுள்ள ஒன்பதாவது பிராந்தியத்தின் வசிக்கும் ஷமாளராணிக்கு ரொக்கப் பரிசையும் வழங்கினார். பெண்களுக்கான ஐம்பது கிலோவுக்கும் கீழ்ப்பட்ட கராத்தே குமித்தே பிரிவு போட்டியில் ஷாமளராணி நாட்டிற்கு தங்கம் வென்றார்.

# செந்தோசா சட்டமன்ற தொகுதியில் சேவையாளர்களுக்கு விருந்தும் பாராட்டும்

முதல் பக்க தொடர்ச்சி...



**கிள்ளான்,** செந்தோசா சட்டமன்றத்திற்கு உட்பட்ட பகுதியில் சிறப்பாக சேவையாற்றிய 120 சேவையாளர்களில் 10 பேருக்கும் மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் சாரி அவர்களால் சேவை அங்கீகாரம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

முதலில் பாடல், பின் தொடர்ந்து பின்னணி இசையுடன் கோலா களமாக விருந்து தொடங்கியது. முதலில் நிகழ்ச்சியில் கலந்துக் கொண்டவர்களுக்கு சிறப்பு அதிர்ஷ்ட குலுக்கு நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டன. மொத்தம் 14 நபர்களுக்கு பரிசு வழங்கப் பட்டன.

இந்த நிகழ்ச்சி முழுக்க முழுக்க செந்தோசா சட்ட மன்ற தொண்டர்களால் நடத்தப் பட்டது.. செந்தோசா சட்ட மன்ற தொகுதி தொண்டர்கள் குழுவின் செயலாளர் டாக்டர் உமா இராணி செயலாளராக இருந்து ஏற்பாடுகளை செய்தார். நேற்றைய நிகழ்ச்சியில் வரவேற்புரையாற்றி நிகழ்ச்சியை தொடக்கி வைத்தார்.

இந்த சிறப்பு நிகழ்வு கடந்த ஆண்டே நடத்த திட்ட மிடப் பட்டது. ஆனால் சிறப்பாக நடத்த வேண்டும் என்ற நோக்கத்தால் மிகவும் நேர்த்தியாக நடத்தப்பட கால அவகாசம் தேவை பட்டதாக கூறினார் டாக்டர் குணராஜ்.

நிகழ்ச்சிக்கு அனைவரும் முறையாக இரவு 7.30 மணிக்கு வந்து சிறப்பித்தனர். இதே போல் மாநில மந்திரி புசார் அமிருடின் சாரியும் சாரியாக இரவு 8.30 மணிக்கு தங்கும் விடுதி மண்டபத்துக்கு வந்து சேர்ந்தார். அதன் பின் நிகழ்ச்சி தொடங்கியது.

இந்த நிகழ்ச்சியில் நாட்டின் புகழ் பெற்ற பூப்பந்து வீரரும் , அத்தொகுதியில் வசிப்பவரான குமாரி தினா முரளிதரன் மற்றும் அவர்களது பொற்றோரும் குடும்பத்துடன் கலந்து கொண்டனர் என்பது சிறப்பு அம்சம்.

சேவையாளர் பெயர்கள் தேர்வு குழுவிற்கு முன் மொழியப்பட்டது. இதில் சமூக அமைப்புக்கள், ஆலயங்கள், சீன ஆலயங்கள், பள்ளிவாசல்கள், தேவாலயங்கள், தனி நபர்கள், செல்வாக்கு பெற்ற செல்வந்தர்கள் என மா பெரும் பட்டியலே அடங்கியுள்ளன. இவர்கள் அனைவரும் தொகுதி சட்டமன்ற உறுப்பினரோடு அல்லது தனித்தோ சிறப்பாக மக்களுக்கு சேவையாற்றியுள்ளனர்.

இந்த நற் சேவையாளர்களை முறையாக அடையாளங்கண்டு தேர்வு செய்யும் பொறுப்பு நால்வர் அடங்கிய தேர்வு குழுவினருக்கு வழங்கப் பட்டது. இந்த தேர்வுக் குழு 120 பேரிலிருந்து மகத்தான சேவையாற்றிய 10 பேர்களை தேர்வு செய்தனர். அந்த 10 பேருக்கும் மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் சாரி அவர்களால் சேவை அங்கீகாரம் வழங்கி முறையாக கௌரவிக்கப்பட்டனர்.

இந்த வரலாற்று பூர்வமான நிகழ்ச்சியில் செலாயாங் நாடாளுமன்ற உறுப்பினர் வில்லியம் லியோங், கிள்ளான் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சார்லஸ் சந்தியாகோ, கிள்ளான் வட்டார வணிக பெருமகனார் செந்தமிழ் செல்வர் ஓம்ஸ் ப.தியாகராஜன், கிள்ளான் நகராண்மை கழக இந்திய உறுப்பினர்கள், இந்திய சமுதாய தலைவர்கள் ( KKI ) மற்றும் சிலாங்கூரின் பல்வேறு பாகங்களில் இருந்தும் ஏறக்குறைய 500 க்கும் மேற்பட்டவர்கள் சிறப்பாக கல்ந்துக் கொண்டனர் என்பது குறிப்பிட தக்கது.

விருந்துக்கு பின் நற்சேவையாளர்கள் கௌரவிக்கப் பட்டனர்.பின் இரவு 11.00 அளவில் நிகழ்ச்சி நிறைவு செய்யப்பட்டது.

நற்சேவையாளர்களை முறையாக கௌரவித்து நிகழ்ச்சிக்கு சிறப்பு செய்து முடித்த பின் டத்தோ ஸ்ரீ அமிருடின் சாரி விடை பெற்று சென்றார்.

# தேர்தல் முடிவு எப்படி இருப்பினும்

## விளையாட்டரங்க நிர்மாணிப்பு நிச்சயம் தொடரும்

**ஷா ஆலம்,** வரும் மாநிலத் தேர்தல் முடிவு எப்படி அமைந்தாலும் ஷா ஆலம் விளையாட்டுத் தொகுதியின் நிர்மாணிப்பு (கே.எஸ்.எஸ்.ஏ.) நிச்சயம் தொடரும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி உறுதியளித்துள்ளார்.

இந்த அரங்க நிர்மாணிப்பு என்பது தனது தனிப்பட்ட முடிவு அல்ல என்றும் மாறாக, மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான், சிலாங்கூர் ராஜா மூடா மற்றும் சிலாங்கூர் விளையாட்டு ரசிகர்களின் விருப்பம் என்றும் அவர் சொன்னார். இந்த விளையாட்டரங்க நிர்மாணிப்பு தேர்தலுக்கு முன்பு அல்லது பின்பு நடைபெறுமா? என்பது கேள்வியல்ல. பிற்காலத்தில் பிரச்சனைகள் ஏழாதிருக்க விதிகளை முறையாக கடைபிடிக்க வேண்டியுள்ளது என்று அவர் தெரிவித்தார்.



என்ன நடந்தாலும் அரங்கின் நிர்மாணிப்பு தொடரும். சிலாங்கூரிலுள்ள கால்பந்து ரசிகர்களின் எதிர்பார்ப்பின் அடிப்படையில் இந்த திட்டம் முன்னெடுக்கப்படுகிறதே தவிர எனது தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் அல்ல. இது தவிர, மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் மற்றும் ராஜா மூடாவின் ஈடுபாடும் இதில் உள்ளது என்றார் அவர்.

இதனிடையே, இந்த திட்ட நிர்மாணிப்புக்கு உண்டாகும் செலவுக்கு ஈடாக நிலங்களை வழங்குவது தொடர்பான பேச்சுவார்த்தை இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக அவர் கூறினார்.

# சிலாங்கூரின் சிறந்த விளையாட்டு

## வீரர்கள் - ஷாமேந்திரன்-எம். தினா தேர்வு




**ஷா ஆலம்,** சிலாங்கூர் மாநிலத்தின் 2021-2022ஆம் ஆண்டிற்கான சிறந்த விளையாட்டு வீரர் – வீராங்கனையாக தேசிய கராத்தே-டோ விளையாட்டாளர் ஆர்.ஷாமேந்திரன் மற்றும் மகளிர் பூப்பந்து இரட்டையர்களில் ஒருவரான எம்.தினா ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இங்குள்ள சுல்தான் அப்துல் அஜிஸ் ஷா கட்டிடத்தின் ஜூப்ளி பேராக் மண்டபத்தில் ஜூன் 4ன்று நடைபெற்ற இந்த விருதளிப்பு நிகழ்வில் மாநிலத்தின் சிறந்த விளையாட்டு வீரர்- வீராங்கனையாக அவ்விருவரும் அறிவிக்கப்பட்டனர். ஷாமேந்திரன் மற்றும் எம்.தினாவுக்கு தலா 10,000 வெள்ளி ரொக்க வெகுமதி, வெற்றிக் கிண்ணம் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

இந்த விருதளிப்பு நிகழ்வுக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஷாமேந்திரன், தமது பத்தாண்டு கால விளையாட்டுத் துறை வரலாற்றில் இது போன்ற விருதைப் பெறுவது இதுவே முதன் முறை என்று கூறினார்.

சிறந்த விளையாட்டு வீராங்கனைக்கான விருதைப் பெற்ற எம்.தினா அடுத்த வாரம் நடைபெறவிருக்கும் 2023ஆம் ஆண்டு சிங்கப்பூர் பொது பூப்பந்து போட்டிக்கான தயார் நிலைப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளதால் தினாவின் தந்தை எஸ்.முரளிதரன் அவரின் சார்பில் விருதைப் பெற்றுக் கொண்டார். மாநில நிலையிலான சிறந்த விளையாட்டாளர் விருதை தன் மகள் பெற்றது குறித்து முரளிதரன் மகிழ்ச்சி தெரிவித்தார்.

Diterbikan oleh **Media Selangor Sdn Bhd** (Sebelumnya dikenali **Communication Sdn Bhd**), Aras 11, Menara Bank Rakat, No1 Jalan Indah 14/8, Seksyen 14, 4000 Shah Alam, Selangor. Dicetak oleh **Ultimate Print Sdn Bhd** Lot 2, Jalan Sepana 15/3, off persiaran Seksyen 15, 40200 Shah Alam, Selangor